விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை (23.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

# பொதுமக்களை விடுவிக்காவிடில் புலிகளை அரசு தடை செய்யும்



## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள அப்பாவித் தமிழ் மக்களை சீக்கிரம் விடுவிக்காது போனால் புலிகளை உள்ளூரில் ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்ய வேண்டி நேரிடும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## றோகித–அலோக் கொழும்பில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் றோகித போகொல்லாகம கொழும்பில் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு வருகை தரவுள்ளமை குறித்து இருவரும் கலந்துரையாடியதாக (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றுப் பரவலாக விமான,எறிகணைத் தாக்குதல்

(கிளிநொச்சி)

வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் அப்பாவி பொதுமக்கள் மீது படையினர் நடத்திய கண்மூடித்தனமாக தாக்குதலில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சி மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்றுப் நண்பகல் 12 மணியளவில் படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் எஸ்.நாதன் (வயது 32) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த எறிகணைத் தாக்குதலில் மக்களின் வீடுகளும் பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி பொது மருத்துவமனையை அண்டிய சூழலில் விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி பொது மருத்துவமனையை அண்மித்த (12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றை கூட்டுமாறு கோரி ஐ.தே.கட்சி பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

2008ஆம் ஆண்டு முடிபடைவதற்கு முன்னர் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் விலையைக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பை அரசாங்கம் அமுல்படுத்தாமை மற்றும் தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடிகள் குறித்து விவாதிப்பதற்கு நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி பிரதமரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனவரி மாதம் 6 ஆம் திகதியே நாடாளுமன்றம் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாட விருப்பதனால் இந்த வருடம் முடிப டைவதற்குள் நாடாளுமன்றத்தைக் கூட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

தேசியப் பாடசாலை ஆசிரியர் நேர்முகப் பரீட்சையில் தேர்வு பெற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையை எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளிலும் ஜனவரி மாதம் 3,4 மற்றும் 5ஆம் திகதிகளிலும் கல்வி அமைச்சில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஐந்து நாட்களுக்கான இந்த நேர்முகப் பரீட்சையை கல்வியமைச்சில் நடத்தவுள்ளதாகவும் அதன் மூலம் தேசிய பாடசாலைகளுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை இழந்தாலும் மோதல்கள் தொடரும்

### நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியை இழந்தாலும் மோதல்கள் தொடரும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என இலங்கை அரசாங்கம் விடுத்திருக்கும் நிபந்தனையை அவர் நிராகரித்தார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு மின்னஞ்சல் மூலமாக வழங்கியிருக்கும் செவ்வியிலேயே விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஒரு நகரில் மாத்திரம் எமது சுதந்திரம் தங்கியிருக்கவில்லை. எமது விடுதலைப் போராட்டத்தின்போது பல சமூகங்களையும் பல நகரங்களையும் எம்மால் உருவாக்க முடியும். எமக்கு எமது மக்கள் ஆதரவு வழங்குகின்றனர் என நடேசன் குறிப்பிட்டுள்ளார்.

எமது தாயகப் பிரதேசத்தில் மேலும் பல நிலப்பரப்புக்களைக் கைப்பற்றி எதிர்காலத்தில் பல (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை நோக்கி 5 முனைகளில் தாக்குதல்

### 100 படையினரும் 56 புலிகளும் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியை நோக்கி ஐந்து முனைகளில் படையினர் நேற்று மேற்கொண்ட முன்நகர்வுகளுக்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இரண்டு முனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

மூன்று முனைகளில் முறியடிப்புத் தாக்குதல்கள் தொடர்கின்றன. இதில் இதுவரை 100 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 250க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சியை கைப்பற்றும் நோக்கில் அதன் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகள் ஊடாக மூன்று முனைகளிலும் குஞ்சுப்பரந்தன் பகுதியில் (12ஆம் பக்கம் பார்க்க)

## மழையால் குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்

(கிளிநொச்சி)

வன்னியிலுள்ள பல குளங்களில் தற்போதைய மழை காரணமாக நீர்மட்டம் அதிகரித்துள்ளது. நீண்ட காலமாக இக்குளங்களின் கட்டுக்கள் சீரமைக்கப்பட்டு பேணப்பபாத நிலையில் இக்குளக் கட்டுக்கள் உடைப்பெடுக்கும் அபாயமும் தோன்றியுள்ளது.

உள்ளூர் அமைப்புக்கள், பொதுமக்களின் பணிகளினூடாகவே தற்போது இக்குளங்கள் உடைப்பெடுக்கும் ஆபத்து குறைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையிலுள்ள பல நீர்ப்பாசனங்களைப் பேணுதல், (12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி செயற்படுகிறது

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

தமிழகமே ஒன்றுபட்டு நிற்கும்போது காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு இலங்கை அரசுக்கு ஆதரவான போக்கில் நடந்து கொள்வதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வன்மையாக கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக பழ.நெடுமாறன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். இலங்கை அரசுக்கு இந்திய அரசு இராணுவ ரீதியான உதவிகள் அளிக்கக் கூடாது ஆகிய இரு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழகத்தில் ஒன்றுபட்ட போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களைச் சீர்குலைக்கும் வகையிலும் பிரச்சினையைத் திசைத் திருப்பவும் தமிழகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழகமே ஒன்றுபட்டு நிற்கும்போது இவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு சிங்கள அரசுக்கு ஆதரவான போக்கில் நடந்து கொள்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஈழத் தமிழர்களின் துயரைத் துடைப்பதற்காக மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய பல தலைவர்களைக் கைது செய்ய வேண்டுமென இவர்கள் கூக்குரல் இடுகின்றனர்.

இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் பேச்சுரிமை, கருத்துரிமை ஆகியவற்றை பறிக்கும் வகையில் செயற்படும் இவர்களின் அநீதியான கோரிக்கைக்கு தமிழக அரசு பணிந்து பல தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்திருப்பது அப்பட்டமான ஜனநாயக உரிமைகள் மீறலாகும்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் திரண்டு வரும் உணர்வை மேலும் மேலும் பெருக்கி அதன் மூலம் இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் நிர்ப்பந்தங்களை உருவாக்கி சரியான வழியில் செயற்பட வைப்பதே நமது முக்கிய நோக்கம் என்பதை உணர்ந்து நாம் செயற்பட்டாக வேண்டும்.

பிரச்சினையை திசைத்திருப்பி நமக்கு ஆத்திரமூட்டி குழப்புவதற்கு முயற்சி செய்பவர்களின் வலையில் நாம் விழுந்து விடக் கூடாது. தமிழர்களை ஒன்று திரட்டும் பணியில் முழுமூச்சுடன் செயல்படுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் சங்கானைக் கல்விக் கோட்ட பிரிவிலுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2008இல் சித்தியடைந்த மாணவர்களையும் தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலாம் இடம் பெற்ற மாணவனையும் பாராட்டி பரிசு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை கலாசார மண்டபம், பட்டினசபை வீதி சங்கானையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு, யாழ். ஈ.எஸ்.பி.நிறுவன உரிமையாளர் பே.நாகரத்தினம் ஆகியோரும்;

கௌரவ விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி, சங்கானைக் கல்விக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு, சங்கானை மக்கள்வங்கி முகாமையாளர் ந.துரைராசா, சங்கானை உப அலுவலக பொறுப்பதிகாரி க.மோகனராஜகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-49)

# வவுனியா வைத்தியசாலை பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு மிரட்டல் விடுத்து கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வைத்தியசாலைப் பணியாளர்கள் ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பொது மருத்துவ மனையில் கடமையாற்றிவரும் வைத்தியர்கள் தவிர்ந்த ஏனையோர் நேற்று திங்கட்கிழமை காலை9 மணிமுதல் 11 மணிவரை அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிங்கள வைத்தியர்கள் கொல்லப்பட்டால் நீயும் கொல்லப்படுவாய் என எச்சரித்து சிங்களப் புலியெனக் குறிப்பிட்டு வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்கள் இருவருக்கு மிரட்டல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இந்த அச்சுறுத்தலானது பாரதூரமானது எனத் தெரிவித்தே வைத்தியசாலைப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வைத்தியர்களுக்கு விடுவிக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போலி விசாரணைகள் வேண்டாம் இடம் மாற்று போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ச-5)

# கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடந்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 21ஆம் திகதி முதல் கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஓல்ட் கோல்ட் பி விளையாட்டுக்கழகம் பிற்பகல் 3 மணிக்கும், ஓல்ட் கோல்ட் எ அணியை எதிர்த்து கோப்பாய் ஐ.வி.கழகமும் மோதவுள்ளன. (ச)

# அரசாங்கத்தை கலைப்பதற்கு அதிகப்படியான அக்கறை

## மனோகணேசன் தெரிவிப்பு

மலையக அமைச்சர்களான ஆறுமுகன் தொண்டமானையும், பெரியசாமி சந்திரசேகரனையும் கடுமையாக விமர்சனம் செய்தபடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்க த்தை ஆதரிக்கும் இரட்டைவேட அரசியல் என்னிடம் கிடையாது.

நாங்கள் மலையக அமைச்சர்களை எதிர்ப்பதைவிட தமிழ் மக்களை வரலாறு காணாத கொடுமைகளுக்கு உள்ளாகியிருக்கும் இந்த அரசாங்கத்தை எதிர்த்து அதை அகற்றுவதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றோம். இது எங்களது பகிரங்க நிலைப்பாடு. இவ்விடயத்தில் என்னிடம் எந்தவித ஒளிவுமறைவும் கிடையாது என்று ஜனநாயக மக்கள் முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அமைப்புக்களின் தலைவர் மனோகணேசன் எம்.பி தெரிவித்தார்.

ஹட்டன் டியூக் விடுதியில் அமைந்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் நுவரெலிய மாவட்ட பிரதான தேர்தல் அலுவலகத்தில் ஞாயிறன்று கட்சியின் மாவட்ட தேர்தல் பிரசார அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய மனோ எம்.பி மேலும்தெரிவித்தாவது;

இந்த நாட்டின் வரலாற்றிலேயே இந்த அரசாங்கத்தைப் போல் கொடுமையான அரசாங்கத்தை தமிழர்கள் சந்தித்ததில்லை. வடக்கு கிழக்கில் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர் மட்டுமல்ல; மலையகத்தில் வாழுகின்ற தமிழர்களையும் இந்த அரசாங்கம் பாரியதுன்பங்களில் தள்ளியுள்ளது. மலையகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக கொழும்பிலே வந்து பணிபுரியும் எமது மலையக இளைஞர்கள் இந்த அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். எம்மிலே பலர் காணாமல் போயுள்ளனர்.

பெரியவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச, சந்திரிகா, ரணில் அரசாங்கங்களில் இடம்பெற்றிருந்த மலையக அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முக்கியத்துவங்களும், ஒதுக்கீடுகளும் இன்றைய மலையக அமைச்சர்களுக்கு வழங்கப்படவில்லை இது இன்றைய அமைச்சர்களின் மனசாட்சிகளுக்கும் நன்றாகவே தெரியும். எனவே தான் மலையகத்தின் பிற்போக்கு தலைமைகளை அகற்றுவதுடன் இந்த அரசாங்கத்தை அகற்றுவதையும் எமது நோக்கங்களாக கொண்டிருக்கின்றோம் என்றார். (ச-5)

# புலிகளுக்கு நவீன ரக ஆயுதங்கள் கப்பல் மூலம் இறக்கப்படுகின்றன!

## பாதுகாப்பு இணையத்தளம் தகவல்

விடுதலைப் புலிகள் நவீனரக ஆயுதங்களை இறக்கி வருவதாக பாதுகாப்பு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தினரின் தாக்குதல்களை அண்மைய நாட்களாக விடுதலைப் புலிகள் முறியடித்து வருவதுடன் இரணைமடுப்பகுதியில் இரண்டு கிலோமீற்றர் தூரத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக இராணுவ மட்டத்தில் அதிர்ச்சி ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்கிவருகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி அவ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவில் வைத்து விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல் ஒன்றை தாக்கி அழித்ததன் மூலம் அவர்கள் ஆயுத இறக்குமதி களை மேற்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரந்தன் மற்றும் நீவில் பகுதிகளில் கடந்த பத்து நாட்களாக நடைபெற்று வரும் உக்கிர மோதல்களில் 200க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 53 பேர் காணாமல் போய் உள்ளனர் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; பரந்தன் மற்றும் நீவில் பகுதிகளில் கடந்த பத்து நாட்களாக நடைபெற்று வரும் மோதல்களில் 200க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 53 படையினரின் உடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

பரந்தன் பகுதியில் உள்ள எல் வடிவ மண் அணையை உடைக்கும் முயற்சிகளை படைத்தரப்பு மேற்கொண்ட போதே இம்மோதல்கள் வெடித்திருந்தன.

சில பகுதிகளில் மண் அணைகளின் உயரம் 20 அடிகளாக உள்ளன. அங்கு விடுதலைப் புலிகள் கனரக இயந்திர துப்பாக்கிகளை நிறுவியுள்ளனர்.

மண் அணைகளுக்கு முன்பாக அகழிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அவை நீரால் நிரம்பியுள்ளன. செங்குத்தாக மேல் உயரும் மண் அணைகளை தாண்டுவது கடினமானது.

தொடர்ச்சியான மழை மேலதிக பாதிப்புக்களை படைத்தரப்புக்கு ஏற்படுத்தி வருகின்றது. இந்நிலை ஜனவரி மாதம் நடுப் பகுதி வரை தொடரலாம்.

மண் அணைகளை படையினர் அண்மிக்கும் வரை காத்திருக்கும் விடுதலைப் புலிகள் பின்னர் கனரக துப்பாக்கிகளை கொண்டு அவர்களை தாக்கி அழிக்கின்றனர்.

இந்நடவடிக்கைகளில் படையினரின் பல குழுக்கள் அழிவை சந்தித்துள்ளன. பரந்தன் மற்றும் நீவில் பகுதிகள் பரந்த வெளிகளை கொண்டது. எனவே அங்கு நகர்வது கடினமானது. நாளாந்தம் இந்த மண் அணைகளை கைப்பற்றும் முயற்சியாக படைத்தரப்பு 10-15 தாக்குதல்களை மேற்கொண்டு வருகின் றது. வான்படையும் நாளாந்தம் 10-15 வரையிலான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகள் எவ்வாறு பெருமளவிலான பீரங்கி எறிகணைகளை பயன்படுத்துகின்றனர் என்பதற்கான விடை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்கள் தொடர்ச்சியாக ஆயுத விநியோகங்களை பெற்று வருகின்றனர். அண்மையில் முல்லைத்தீவு கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுத கப்பல் ஒன்று தாக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடைபெற்ற வேளை அந்த கப்பலில் இருந்து கணிசமான ஆயுத தளபாடங்கள் இறக்கப்பட்டுவிட்டது.

அதேவேளை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் நடைபெற்ற இரு நாள் மோதல்களில் கொல்லப்பட்ட 400 படையினரின் உடலங்கள் பொரளையிலுள்ள ஜெயரட்ன மலர்சாலைக்கு கடந்த வியாழக்கிழமைகொண்டுவரப்பட்டதாக கொழும்பு தகவல்களை ஆதாரம் காட்டி பாதுகாப்பு இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## இன்று ஒரு தகவல்

# தலையின் விலை

அசோக மன்னர், அவருடைய ஆலோசகர்கள் எல்லாம் அரசவைக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

அந்த சமயத்தில் அவர்களுக்கு எதிரில் ஒரு புத்த பிக்கு வந்தார்.

அசோகர் உடனே ஓடிப்போய் அவரது காலில் விழுந்து வணங்கினார். அசோக மன்னரின் தலை அந்த புத்த துறவியின் பாதத்தில் பட்டது.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த அமைச்சருக்கு சங்கடமாகிவிட்டது. மிகவும் வருந்தினார்.

நமது அசோகச் சக்கரவர்த்தி; எப்பேறப்பட்டவர். அவருடைய தலை ஒரு சந்தியாசியின் பாதத்தில் படுவதா? என்று நினைத்து கவலைப்பட்டார்.

அரண்மனைக்கு வந்ததும் அமைச்சர் இதைக் கேட்டார்.

''அரசே ! எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அசோகச் சக்கரவர்த்தியின் சிரம் ஒரு சந்தியாசியின் காலில் படுவதா?'' என்றார்.

அசோகர் பதில் சொல்லவில்லை. சிரித்துவிட்டு போய் விட்டார். அதன் பின்னர் ஒரு சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டு ''எனக்கு மூன்று சிரங்கள் வேண்டும். முதலாவது ஆட்டின் தலை, இரண்டாவது புலியின் தலை, மூன்றாவது மனிதனின் தலை. எங்கிருந்தாலும் கொண்டு வாருங்கள்!'' என்று உத்தரவிட்டார்.

அமைச்சர் புறப்பட்டார். ஆட்டுத்தலையும் புலித்தலையும் கிடைத்தது. பின்பு ஒரு சுடுகாட்டுக்குப் போய் ஒரு மனிதத் தலையையும் எடுத்துக்கொண்டு ராஜவிடம் போனார்.

அசோகர் பார்த்தார்.

''இப்பொழுது இது மூன்றையும் எடுத்துக்கொண்டுபோய் சந்தையில் விற்றுவிட்டு வாருங்கள்'' என்றார்.

அமைச்சரும் அவற்றை எடுத்துக்கொண்டு சந்தைக்குப் போனார்.

முதலில் ஆட்டுத்தலையை யாரோ நல்ல விலை கொடுத்து வாங்கிக்கொண்டுபோனார்கள். அடுத்ததாக புலித்தலையை பாடம் பண்ணி வீட்டில் மாட்டிவைக்கலாம் என்று நினைத்து ஒருவர் வாங்கிக் கொண்டார்.

மனிதத்தலையை வாங்குவதற்கு மட்டும் யாரும் முன்வரவில்லை. எல்லோரும் விலகிவிலகிப் போய் விட்டார்கள்.

''அமைச்சர் திரும்பி வந்து அரசே இந்தத் தலையை மட்டும் யாரும் வாங்க முன்வரவில்லை'' என்றார்.

''சரி...பரவாயில்லை... இதை இனாமாகவே கொடுத்துவிடுங்கள்! என்றார்.

அமைச்சர் மறுபடியும் சந்தைக்குப்போனார்.

''இலவசமாக தருகிறேன் இதை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றார்.

அப்பொழுதும் அதை யாரும் வாங்க முன்வரவில்லை.

மறுபடியும் திரும்பி வந்து மன்னரிடம் விஷயத்தைச் சொன்னார்.

அதற்கு மன்னர்,

''அமைச்சரே! உயிர் இருக்கும் வரைக்கும் தான் இந்தத்தலைக்கு மதிப்பு. ஜீவன் போனபின் அதன் மதிப்பும் போய்விடுகிறது. ஆகையினால் மதிப்பு இருக்கும்போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அந்தப் புனிதத்தை பெற்றுக் கொள்ளவேண்டும்'' என்றார்.

பணிவு என்பது வேறு அடிமைத்தனம் என்பதுவேறு பெரியவர்களைப் பணிவது நமக்கு பெருமை தரக்கூடிய விடயம்.

இதை மனதில் வைத்துக்கொண்டு எப்பொழுது காலில் விழவேண்டும்– எப்பொழுது காலில் விழக்கூடாது என்பதை முடிவு பண்ணவேண்டும்.

ஒரு சாதாரண ஆள் நடந்துவந்துகொண்டிருந்தார். எதிரில் வந்த ஒரு பெரிய மனுஷன் ஓடிப்போய் அவருடைய காலில் விழுந்தார். வந்த பின்பு அவரிடம் ''ஏன் திடீரென அவர் காலில் விழுந்தீர்கள்'' என்றேன்.

''அவர் போட்டிருக்கிறது காணாமல் போன என்னுடைய செருப்பா என்பதை கண்டு பிடிப்பதற்காகத்தான் அப்படி விழுந்தேன்'' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நகர, பிரதேச சபை செயலாளர்களாக நியமிப்பதற்கான பயிற்சி

## வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு மாகாணத்திலுள்ள நகர, பிரதேச சபைகளில் முகாமைத்துவ உதவியாளர்கள் தரம் I இல் உள்ளவர்களுக்கு செயலாளர் பதவி வழங்குவதற்காக பயிற்சிகளை வழங்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜொன்சன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

ஏற்கனவே நடைமுறையிலுள்ளது போன்று உள்ளூராட்சி சபைகளில் முகாமைத்துவ உதவி யாளர் தரம் I இல் உள்ளவர்களை நகர, பிரதேச சபை செயலாளர்களாக நியமிப்பதற்கான பயிற்சிகளை வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் விரைவில் நகர, பிரதேச சபைகளில் செயலாளர்களாக நியமிக்கப்படவுள்ளன என வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜாவுக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங் களில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சனால் விண்ணப்பம் கோறப் பட்டது.

எனினும், இவ் விடயம் குறித்து தமிழ் பேசும் மத்திய அரசு முகாமைத்துவ உதவியாளர் சங்கம் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு செயலர் பதவி வழங்கவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர். தற்போது மீண்டும் இந்நிலையில் முகாமைத்துவ உதவியாளர்கள் தரம் I இல் உள்ளவர்களுக்குநகர, பிரதேசசபை செயலாளர்களாக நிய மிப்பதற்கு பயிற்சியை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# தமிழ் எழுத்துக்களின் புதிய அட்டவணை கல்வி அமைச்சால் விரைவில் வெளியிடப்படும்

தமிழ் எழுத்துக்களில் அட்டவணை தொடர்பான உண்மை நிலையை அறியும் பொருட்டு பல அறிஞர்கள் கொண்ட குழு ஆய்வில் ஈடுபட்டுள்ளது. கூடிய விரைவில் இவ்வட்டவணை வெளியிடப்படும். எனவே அறிஞர்கள் பேராசிரியர்களினதும் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், விதந்துரைப்புக்களும் எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழக எழுத்துக்களின் அட்டவணையானது தமிழ் பாட நூல்கள் ஒவ்வொன்றிலும் அச்சிடப்பட்டுள்ளது. இதுவரவேற்கப்பட வேண்டியது. எழுத்துக்கள் யாவும் 'அ' வில்தான் ஆரம்பிக்கும் தமிழ், சிங்களமொழியாக இருந்தாலும் இது பொதுவானது.

இது இவ்வாறு இருக்க மேற்படி அட்டவணையில் (ஃ) ஆயுத எழுத்து முதலிடம் பெற்றிருக்கின்றது.

இது மாணவர்களுக்கு தவறான எண்ணக்கருவை ஏற்படுத்திவிடும். இது நீண்டகாலமாக தொடர்ந்து வந்துள்ள போதிலும் கட்டாயமாக திருத்தப்பட வேண்டியதொன்று.

இது தொடர்பில் பிரதிக் கல்வியமைச்சர் எம். சச்சிதானந்தனின் ஆற்றுகையுடன் கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகரான முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனினால் தமிழ் மொழி மூலப் பாடநூல்களின் தர மேம்பாடு, விதந்துரைப்பு, திருத்தங்கள் தொடர்பான இரு செயலமர்வுகள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நடத்தப்பட்டன.

இவற்றின் ஆய்வறிக்கைகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டன. இவ்வறிக்கையின் விதந்துரைப்புக்கமைய தமிழ் எழுத்துக்களின் அட்டவணையானது 'அ' வில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம். என். ஜே. புஸ்பகுமார மற்றும் இதன் தமிழ்ப் பிரிவு உதவி ஆணையாளர் லெனின் மதிவாணம் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில்,

பாடநூல்களில் அச்சிடப்பட்டிருக்கின்ற தமிழ் எழுத்துக்களின் அட்டவணையானது இதுவரை காலம் தமிழ் அறிஞர் களால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டவணை யெனவும் இதைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் பின்பற்றி வருவதாகவும் மேலும் இது தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டு உரிய அறிஞர்களால் உறுதிப்படுத்தப்படுமாயின், தேவையான மாற்றத் தினை எம்மால் பின்பற்றக் கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## இராசி பலன்

23.12.2008
(மார்கழி 08, செவ்வாய்க்கிழமை)
ஏகாதசி முற்பகல் 11.01 மணிவரை
சுவாதி முற்பகல் 11.47 மணிவரை
இராகுகாலம் 3.26-4.56 மணிவரை
சுபநேரம் 10.56-12.26 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு |
| இடபம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், ஆரோக்கியம், போசன சுகம் |
| மிதுனம் | அஜீரண ரோகம், வேலைச் சுமை, முயற்சி தாமதம், தனவிரயம் |
| கடகம் | உறவினர் சந்திப்பு, மனச்சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, கல்வியில் ஆர்வம் |
| சிங்கம் | இனிய சம்பவம், கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, போசன சுகம். |
| கன்னி | விவாதம், கௌரவக் குறைவு, திடீர் நன்மை, பணவிரயம் |
| துலாம் | கற்பனை மிகுதி, சயனசுகம், நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை |
| விருச்சிகம் | தந்தைவழி உறவு, உணர்ச்சி வசப்படல், உஷ்ண வியாதி பிரயாணம் |
| தனுசு | செய்தொழில் நன்மை, கீர்த்தி, காரிய நன்மை, விருந்துபசாரம் |
| மகரம் | அதிகாரம், தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி, ஆரோக்கியம் |
| கும்பம் | ஆரோக்கியக் குறைவு, கட்டுப்பாடு, புதிய முயற்சி, ஆன்றோர் சந்திப்பு |
| மீனம் | வாகன பயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், போசன சுகம். |

வளவன்

## தொழிற்துறைசார் நிலையங்கள் பற்றிய தகவல்கள் திரட்டல்

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் இயற்கை அனர்த்தம் காரணமாகவும் பாதிக்கப்பட்ட தொழிற்துறை சார் நிலையங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றிய விபரங்களையும் அவற்றை புனருத்தாரணம் செய்வதற்குத் தேவையான செலவின் மதிப்பீடுகளையும் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை தொழிற் துறைத்திணைக்கள நல்லூர் பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களிடம் பெற்று பூரணப்படுத்தி இம்மாதம் 31ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் கிராம அலுவலரின் உறுதியுரையுடன் வழங்கி உதவுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கேட்டுக்கொள்கிறார். (ஓ)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருவதற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வெளியான வர்த்தக மானி அறிவித்தல் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி வெளியான வர்த்தமானிக்கமைய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீளவும் இப்பரீட்சைக்கு விண்ண்பிக்கவேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை பதிவுத்தபாலில் எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு திணைக்களத்தலைவர்கள் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களை இம்மாதம் 19ஆம் திகதி வெளியான வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (5)

## கிணறுகளை துப்புரவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அசுத்த மடைந்த பருத்தித்துறை நகர சபை எல்லைக் குட்பட்ட தனியார் கிணறுகளையும் இறைத்து துப்புரவு செய்வதற்கு நகர சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

எனவே கிணற்றினை இறைத் துத் துப்புரவு செய்யவிரும்வோர் நகர சபைக் காரியாலயத்தில் தங்கள் பதிவினை மேற் கொள்ளுமாறு பருத்தித்துறை நகர சபை செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு இடம் பெயர்ந்தோர் நிவாரணச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ராச வீதி அச்சுவேலியில் அமைந் துள்ள வலி வடக்கு இடம் பெயர்ந்தோர் நிவாரண சங்கக் காரியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அச்சுவேலி ப.நோ. கூ சங்கத்திற்கு உட்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் மு.விநாயகமூர்த்தி கேட்டுக் கொள் கிறார்.

இக்கூட்டம் கடந்த 19ஆம் திகதி நடை பெற இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்விவலய விசேட கல்விப் பிரிவினால் மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வலய மட்டப் போட்டி களில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு யா/ இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பரிசு பெறும் மாண வர்கள் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள் ளார். (ஓ)

## 2004ஆம் ஆண்டின் பின்னர் இவ்வருடமே அதிக மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

2008ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் 22.12.2008 வரை யாழில் மொத்த மழைவீழ்ச்சி 1801.1 மில்லி மீற்றராகப் பதிவாகி யுள்ளதாக யாழ்ப்பாண வளிமண்டல ஆரா ய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

2004ஆம் ஆண்டிற்குப் பின்னர் இவ் வருடமே அதிகமான மழைவீழ்ச்சி பதிவா கியுள்ளது.

மார்கழி மாதத்திற்கான மொத்த சராசரி மழைவீழ்ச்சி 278.2 மில்லி மீற்றராகக் காணப்பட்டபோதும், இவ் வருடம் மார்கழி மாத மழைவீழ்ச்சி 173.8மில்லி மீற்றராகவே காணப்படுகின்றது.

அத்துடன் இன்னும் 3 நாட்களுக்கு சீரான காலநிலை நிலவ வாய்ப்புள்ளதாகவும் தெரி வித்துள்ளது. (ஓ)

# மாணவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டல்

(அல்வாய்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் தினால் வடமாகாண பாடசாலைகளில் 2006, 2007,2008 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் பாடசாலையிலிருந்து இடைவிலகிய, இடை வகுப்புகளில் சேர்க்கப்பட்ட புதிதாகச் சேர்க் கப்பட்ட பிள்ளைகள் தொடர்பான தகவல்கள் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்பிரகாரம் ஒவ்வொரு பாடசாலையி லிருந்தும் தகவல்களைத் திரட்டி உரிய படிவத்தில் பூர்த்தியாக்கி இவ்விபரங்களை கோட்டமட்டம், வலய மட்டத்தில் பேணப்படுவ துடன் வட மாகாணக் கல்வித் திணைக்களத் திற்கு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக இணைப் பாளர், கருப்பொருள் I (THEMEL) வட மாகாணக் கல்வித் திணைக்களம் விரோதய நகர், திருகோணமலை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண க் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கேட்டுக் கொள் கிறார்.

இச் செயற்பாட்டின் பொருட்டு சகல அதிபர் களும் விரைவில் தகவல்களைத் திரட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத் தில் சமர்ப்பிக்குமாறும், கோட்டக் கல்வி அதி காரிகள் உரிய காலத்துக்குள் அனுப்புவதற் கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடம ராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-19)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்ட இல 13இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப் பாணம் அனர்த்த முகாமைத்துவ நிலையத் திற்கு "மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங் கிணைப்பாளர்'' பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் பதவிக்கான கடமைகள், தகுதிகள், சம்பள அளவு என்பவற்றை விண்ணப்பதா ரிகள் மாவட்டச் செயலகம், அந்தந்தப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஆகிய இடங்களில் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்களை பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத் துவ நிலையம், அறை இலக்கம் 2-222, பண்டா ரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்த லோக மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட் கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)

# புதுமுக மாணவர்களுக்கான ஆங்கில விரிவுரை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவ னத்தின் 2009 ஆம் ஆண்டு பகல் நேர் புதுமுக மாணவர்களுக்கான அறிமுக ஆங்கில விரிவுரைகள் 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அனைத்துப் பகல் நேர புதுமுக மாண வர்களையும் அன்றைய தினம் காலை 8.30மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் து.இராம ஜெயம் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் அன்றைய தினம் காலை 8.15 மணிக்கு யாழ்.மத்திய பேரூந்து நிலையத்திலி ருந்து நிறுவனத்திற்கு பேரூந்து புறப்படவுள் ளதாகவும் மாணவர்கள் இப் பேரூந்தில் பயணிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ)

# நல்லூர் பிரதேச சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை அங்கு கடமை யாற்றும் சகல தரத்தில் உள்ள உத்தியோகத் தர்கள் அனைவரையும் உற்சாகம் ஊட்டும் வகையில் இன்று பிரதேச சபை வளாகத்தில் விளையாட்டுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

சகல உத்தியோகத்தர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு நல்லூர் பிரதேச சபை செய லாளர் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் 26ஆம் திகதி வெள்ளிக் கிழமை இங்கு கடமையாற்றி ஓய்வுபெறும் மற்றும் மாற்றலாகி செல்வோர்களுக்கான பிரிவுபசார வைபவமும் இடம்பெறவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் நடமாடும் சேவை ஒன்றை நடாத்தவுள்ளது.

இங்கு பிரதேச சபையால் மேற்கொள் ளப்படும் ஆதனவரி அறவீடு மற்றும் சந்தை, கால்நடை வரி அறவீடு போன்ற சகல நடவடிக் கைகளும் இடம்பெறும்.

அன்று 2009ஆம் ஆண்டுக்கான ஆதன வரி செலுத்துவோருக்கு 10 சதவீத கழிவும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஓ)

## இலவச சீருடைத்துணிகள் நாளை முதல் வழங்கப்படும்

(அல்வாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலய பாட சாலை மாணவர்களுக்கும் உரிய இலவச சீருடைத் துணி நாளை முதல் வழங்கப் படவுள்ளது என யாழ். கல்வித்திணைக்கள மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஓ-19)

## கிணறுகள் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கிணறு களுக்கு குளோரின் இட்டு துப்புரவாக்கும் பணி தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொட்டடி, மீனாட்சிபுரம், பஜார் வீதிகளில் உள்ள கிணறுகளை துப்புரவாக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகள் அனைத்திற்கும் நடைமுறைப்படுத் தப்படும் எனவும் பாரிய கிணறுகளில் நீர் இறைத்து சுத்தப்படுத்துவதற்கான உதவிக ளும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (ஓ)

## அதிபர்களுக்கான திட்டமிடல் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான 2009 ஆம் ஆண்டிற் கான திட்டமிடல் பயிற்சிப்பட்டறை இன்று காலை 8.30மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் சகல அதிபர்களும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)




## வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர், வண்ணார்பண்ணை பிரதேச வளர்ப்புநாய்களுக்கான (A.R.V) விலங்குவிசர் நோய் தடுப்பூசி நாளை புதன்கிழமை முற்பகல் 9-10 மணிவரை திருக்குடும்ப சனசமூக நிலையத்திலும், முற்பகல் 10-11 மணிவரை யூபிலி மகப்பேற்று நிலையத்தி லும், முற்பகல் 11-12 மணிவரை மரியன்னை பாலர் பாடசாலையிலும், பிற்பகல் 2-3 மணி வரை சென்.செபஸ்ரியன் சனசமூக நிலையத் திலும், பிற்பகல் 3-4 மணிவரை கே.கே.எஸ். வீதி கலைமகள் முன்பள்ளியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங் களது வளர்ப்பு நாய்களுக்கு இத்தடுப்பூசி யினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)




தீவக லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சேவைத் திட்டங்கள் நிகழ்வில் நீரிழிவு விழிப்புணர்வுக் கருத்தரங்கு, நீரிழிவு தொடர்பான இரத்தப் பரிசோதனை, இலவச மருந்து வழங்கல் என்பன இடம்பெற்றது. இந்நிகழ்வுப் படங்களைக் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 19

## மக்கள் வருகை

*வரலாற்றுக்கு முற்பட்ட காலம்*

ஆதி மனிதர் எங்குதோன்றி எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்று இன்றைய நிலையை நாம் அடைவதற்கு வழிவகுத்தனர் என்பதை இட்டு அண்மைக்காலத்தில் மிக முக்கியமான ஆய்வுகள் பல நடைபெற்றுள்ளன. இத்தகைய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதுவரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு ஆபிரிக்கக் கண்டத்திலே தான் ஆதிமனிதர் தோன்றிப் பிற கண்டங்களுக்குச் சென்று குடியேறினர் என அறிவியலாளர் கருதுவர். மனித வர்க்கத்தைச் சேர்ந்தோர் என்று கருதக்கூடிய பண்புகளைக் கொண்ட ஆதிமனிதருடைய எச்சங்கள் ஆபிரிக்காவில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் மிகப் பழையதாகக் கருதப்படுவது 2001 இல் சட் (Chad) நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றாகும். இது ஏறத்தாழ ஏழு மில்லியன் (70 இலட்சம்) ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்நிலையில் இன்றைய மனித வடிவம் காணப்படவில்லை. அப்படியான வடிவம் உருவாகப் பல இலட்சம் ஆண்டுகள் சென்றன. நீண்டகாலப் பரிணாம வளர்ச்சியின் பின் இன்றைய மனித வடிவம் தோன்றியது. இதன்பின், இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன், ஆபிரிக்காவிலிருந்து மனித வர்க்கத்தினர் வேறிடங்களுக்குச் செல்லத் தொடங்கினர். இவர்களே இன்று உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் மக்களுடைய முன்னோர்கள்.

இவ்வாறு நவீன அறிவியலாளர் எடுத்துரைக்கும் மனித பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டால், இன்றைய உலகின் இன வேறுபாடுகள் இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன் காணப்படவில்லை. அப்பொழுது கறுப்பர் என்றும் வெள்ளையர் என்றும் வேறுபடுத்தக் கூடிய வர்க்கங்கள் இருக்கவில்லை. தோல் நிறத்தாலும் தலைமுடியின் தன்மையாலும் கண் அமைப்பாலும் வேறுபடுகின்ற சீனர், ஐரோப்பியர் மற்றும் ஆபிரிக்கர் என்று பிரித்துக் காட்டக் கூடிய இனங்கள் இருக்கவில்லை. ஆகவே, இன்று நாம் காண்பதுபோல் ஆங்கிலேயர், ஜெர்மானியர், மலாயர், சிங்களவர், தமிழர் என்ற இனக் குழுக்கள் அன்று இருக்கவில்லை. வரலாற்று அடிப்படையில் இந்த உண்மையை உணர்ந்துகொண்டால், பல்லாயிரம் ஆண்டுகளாக உலகில் மனித வர்த்தகத்தினுள் ஏற்பட்டு வந்த மாற்றங்களும் கலப்பும், வெளியுலகக் காரணிகளும் செயற்பட்டு இன்றைய இனக் குழுக்கள் உருவாகுவதற்கு உதவின என்பதை விளங்கிக்கொள்ள முடியும். இன்றிலிருந்து காலத்தால் பின் நோக்கிச் செல்லச் செல்ல இன்றைய இனக்குழுக்கள் பல 2000 ஆண்டுகளுக்கு முன் இருக்கவில்லை என்பதை அறியலாம். அதேபோல, இன்று இல்லாத பல இனக்குழுக்கள் 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தன என்பதையும் காணலாம். இன்றைய உலகில் முக்கியத்துவம் பெற்றுள்ள இனக் குழுக்களுக்குள் ஒன்றாகிய ஆங்கிலேய இனக்குழு 2000 ஆண்டுகளுக்கு முன் ஓர் இனக்குழுவாக இருக்கவில்லை. ஆங்கில மொழி எங்காவது பேசப்படவும் இல்லை. ஐரோப்பாவில் 2000 ஆண்டுகளுக்கு முன் ரோமானியர் (ரோமர்) என்ற இனக்குழு ஆதிக்கமுள்ள ஒரு குழுவாக இருந்தது. இன்று அக்குழு இல்லை. அக்குழுவைச் சேர்ந்தோர் பேசிய மொழியாகிய லத்தீன் மொழி தாய் மொழியாக இன்று எங்காவது பேசப்படுவதில்லை.

### தென் ஆசியா

ஆபிரிக்காவிலிருந்து பிற இடங்களுக்குப் பெயர்ந்து சென்ற ஆதி மனித வர்க்கங்கள் இற்றைக்கு ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தென்ஆசியா என இன்று நாம் குறிப்பிடும் நிலப் பகுதியாகிய இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளையும் அவற்றைச் சூழ உள்ள சிறு நாடுகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தை வந்தடைந்தனர் எனத் தொல்லியலாளர் கணிப்பிட்டுள்ளனர். எனினும், இன்று தென் ஆசியாவிலும் உலகின் பிற பாகங்களிலும் வாழும் மனிதர் பிற்பட்ட காலத்தில் (ஏறத்தாழ 200,000 ஆண்டுகளுக்கு முன்) தோன்றி Homo sapiens எனப்படும் மனித வர்க்கத்தின் வழித் தோன்றல்கள் எனவும், Homo sapiens தோன்று முன் வாழ்ந்த வர்க்கங்களின் வழித் தோன்றல்கள் இன்று ஓரிடத்திலும் இல்லை எனவும் அறிவியலாளர் நம்புகின்றனர். ஆகவே Homo sapiens மனித வர்க்கத்தின் புலப்பெயர்ச்சியே இன்றைய மனித சமூகங்களின் வரலாற்றை அறிய உதவும் நிகழ்ச்சியாகும்.


இன்று DNA ஆய்வு மூலம் Homo sapiens வர்க்கத்தவர்களுடைய புலப்பெயர்ச்சியை மிகவும் நுணுக்கமாக எடுத்துக் கூறக் கூடிய அளவுக்கு அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதுவரை நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் நாம் அறியக்கூடியது என்ன? இந்த ஆய்வின் முன்னணியில் இரு குழுக்கள் நிற்கின்றன. இப்புலப்பெயர்ச்சி இற்றைக்கு 85,000 ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவிலிருந்து பிற இடங்களை நோக்கித் தொடங்கியது என்பது ஒரு குழுவின் கருத்தாகும். ஆனால் மற்றக்குழு இப் புலப்பெயர்ச்சி 60,000 ஆண்டுகளுக்கு முன்னர் தான் தொடங்கியது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளது.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

தொடரும்)







கொழும்பு மாவட்ட ஐ.தே.க. வின் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுப்பேருரையும் நேற்று முன்தினம் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றபோது அன்னாரின் உருவப்படத்திற்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும், நினைவுப்பேருரை ஆற்றிய தமிழ்நாடு பேராசிரியர் முனைவர் இரா.செல்வகணபதியை கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறங்காவலர் டி.எம்.சுவாமிநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இதயமொழி பேசுங்கள்! இயற்கையோடு வாழுங்கள்!

ஓர் சதைப் பிண்டமாக பிறக்கும் மனிதன் மற்றைய மனிதர்களோடு உறவுகொள்ளும் ஓர் சமூகப் பிராணி ஆவான். சமூகத்தில் ஓர் தனிப்பட்ட மனிதன் மீது நல் ஒழுக்கங்களை புகுத்துவதன் மூலம் வரவேற்கத்தக்க மாற்றத்தை அச்சமூகத்தின் மீது ஏற்படுத்த முடியும். இதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும். எனவே இதய மொழியை புரிந்து கொள்வோம்.

"வன்முறை" எனும் "களை" பிடுங்கி "நற்சமுதாயம்" எனும் அறுவடை பெறுவோம்.

சிந்தனை (Thinking) + மொழி (Language) வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) அதாவது 'என்னைப் போல் ஒருவன்' என மற்றவரையும் நேசிக்கின்ற மனப்பக்குவம் (Language of Compassion) என்றும் குறிப்பிடலாம்.


தற்காலத்தில் நாம் தலையுடனான தொடர்பாடல் (Head to head language / Judgement Language / Jackal Language - Evaluation) மூலம் தான் தொடர்புகளை ஏற்படுத்துகின்றோம்.

இதயத்தோடு இதயம் (Heart to heart Language / Graffe Language- Observation) பேசுவதில்லை.

அதாவது இப்போது இந்த பிரச்சினைக்கு ஒருவருள் / பலருள் உண்மையில் உள்ளது என்ன? (What is alive in you here and-Now?) என்பதனை இதய பூர்வமான இணைப்புக்களை (Empathy) ஏற்படுத்துவதன் மூலம் உணர்வதனை மறந்து விடுகின்றோம்.

### வன்மொழியை இன்மொழி ஆக்கல்


Translating "J" Into "G"




நாம் பேசுகின்ற மொழி அல்லது நமது தொடர்பாடல் (Jackal) வன்மொழி முறையிலேயே அமைந்துள்ளது. எதிலுமே ஓர் கணிப்பு (Judgement) இருக்கின்றது. இந்த மொழிமாறி இதயமொழி (Giraffe) வெளிவரவேண்டும்.


### உயிருடன் இணைந்த தொடர்பாடல்

Life - Connected Communication




### வாழ்க்கை - உறவுத உயிர் முறிவு கொள்கின்ற தொடர்பாடல்

Life - Alienated Communication




தற்காலத்தில் 'எங்கும் எதிலும் வன்முறை' என்பதாக பேசிக் கொள்கின்றோம்.

உண்மையில் வன்முறை எதனால் பிறக்கின்றது என்பது உங்களிற்கு தெரியுமா? ஆம் !, நிறைவேற்றப்படாத தேவைகளின் வேதனைக்குரிய வெளிப்பாடுகளே வன்முறையர்க உருவெடுக்கின்றது. (All violence is a tragic expression of unmets needs) இதனால் "மற்றவர்கள் என் வேதனைக்குக் காரணமானவர்கள். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்" என்ற குற்றம் சுமத்தும் மனப்பாங்கு உருவாகின்றது.


டாக்டர் எஸ்.குமுதினி
TOT,FNVC,
திருகோணமலை.

அதாவது ஒருவரின் பங்கினை (role) திருப்தியாக அவரால் செய்யமுடியாது போய்விடுகிறது. அங்கு முரண்பாடு (Conflict) தோன்றுகின்றது. சமூக மாற்றங்கள் சிறிய முரண்பாடுகளிலிருந்து தான் ஆரம்பித்தாலும், அவை சில சமயங்களில் சமூகத்திற்கே சவாலாக அமைந்து விடுவது வேதனைக்குரியது.

இந்த சவால் களை வெல்வதற்கு 'இதயமொழி'யை உணர்ந்து கொள்வது இன்றியமையாதது.

### வன்முறையற்ற தொடர்பாடல் கட்டமைப்பு

Componenets of Non violent Commutication




நாம் தெரிந்து கொண்ட 'இதயமொழி' ஐ எம் வாழ்விலும் நடைமுறைப்படுத்தி வன்மொழிச் சமுதாயத்தை வென்று வன்முறையற்ற இனிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பி இயற்கையோடு வாழ்வோம்.

# சிறுநீரகக் கற்களால் சிரமமா?

எகிப்து நாட்டில் புராதன காலத்தில் புதைக்கப்பட்ட 'மம்மி' க்களின் உடலில் கற்கள் இருந்திருக்கின்றன. உலகப் புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் 'ஹிப்போகிரேடிஸ்' சிறுநீரகக் கற்களைப் பற்றியும் அவற்றின் விளைவுகளைப் பற்றியும் பல ஆண்டுகளுக்கு முன்பே விளக்கமாகக் கூறியுள்ளார். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'சுஸ்ருத சம்ஹித்' எனும் இந்திய மருத்துவ நூலில் 'சுஸ்ருதர்' என்ற பழங்கால மருத்துவர் சிறுநீரகக் கற்களுக்கான சிகிச்சை முறைகளை விரிவாக எழுதியுள்ளார். இன்றும் சிறுநீரகக் கற்களால் துன்பப்படும் மக்கள் உலகில் பல நாடுகளிலும் இருக்கிறார்கள்.

சிறுநீரகக் கற்கள் சிறுவர் முதல் முதியோர் வரை எல்லா வயதினருக்கும் வருகிறது. ஆண், பெண் இருபாலரும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்றாலும் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களுக்கு இந்தத் தொந்தரவு குறைவாகத்தான் இருக்கிறது.

**அதற்கு முக்கிய காரணங்கள்**

பெண்களுக்குச் சுரக்கும் 'ஈஸ்ட்ரோஜன்' என்னும் இயக்குநீர் சிறுநீரில் சிட்ரிக் அமிலத்தின் அடர்த்தியை அதிகரிக்கிறது. இந்த அடர்த்தி நிறைந்த சிட்ரிக் அமிலம் பெண்களுக்குச் சிறுநீரில் கல் உண்டாவதைத் தடுக்கிறது.

பெண்களுக்கு சிறுநீர் புறவழிப் பாதையின் நீளம் குறைவாக இருப்பதால் சிறுநீர் தடங்கலின்றி வெளியேறி விடுகிறது. இதனாலும் அவர்களுக்கு சிறுநீரகக்கல் தோன்றும் வாய்ப்பு குறைகிறது.

**சிறுநீரகக் கற்கள் தோன்றும் விதம்**

நாம் குடிக்கும் தண்ணீரில் கல்சியம், மக்னீசியம், பொஸ்பேட், ஆக்ஸலேட், யூரியா என்று பல வகை உப்புகள் உள்ளன. சாப்பிடும் உணவிலும் இவை அதிகமாக உள்ளன. சாதாரணமாக இந்த உப்புகள் சிறுநீரில் வெளியேறிவிடும். சில சமயங்களில் இந்த உப்புக்களின் அளவு இரத்தத்தில் எல்லையைத் தாண்டும் போது இவை சிறுநீரில் வெளியேறுவதற்கு தடை ஏற்படும். அந்தச் சமயங்களில் சிறுநீர்ப் பாதையின் சிறுநீரகம், சிறுநீர்ப்பை மற்றும் இவை இரண்டையும் இணைக்கும் இணைப்புக் குழாய்கள் ஆகியவற்றில் உப்புக்கள் படிகம் போல் படிந்து, சிறுகச் சிறுகச் சேர்ந்து கல் போலத் திரளும். சிறு கடுகு அளவில் ஆரம்பித்துப் பெரிய நெல்லிக்காய் அளவுக்கு வளர்ந்து விடும். இதைத்தான் சிறுநீரகக்கல் என்கிறார்கள்.

**கற்கள் தோன்றக் காரணங்கள்**

பல காரணங்களால் சிறுநீரகக் கற்கள் தோன்றுகின்றன. கல்சியம், மக்னீசியம், ஆக்ஸலேட் உப்புக்கள் அதிக அளவில் உள்ள தக்காளி, பட்டாணி, பாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு போன்றவற்றை அடிக்கடி அதிகமாகச் சேர்த்துக் கொண்டால், சிறுநீரகக் கற்கள் தோன்றலாம்.

ஆண்களுக்குச் சிறுநீர்ப்பைக்கு அருகில் இருக்கும் சுரப்பி 'புராஸ்டேட்' சுரப்பி (Prostate Gland) வயதான காலத்தில் வீங்கிக் கொள்ளும். சிலருக்குச் சிறு நீர்ப்பை இணைப் புக் குழாய்க ளில் (Ureters) சுருக்கம் ஏற்ப டும். இவற்றால் சிறுநீர் வெளி யேறுவதில் தடை உண்டாகும். சிறுநீரகத்தி லும் சிறுநீர்ப்பையிலும் சிறுநீர்த் தேக்கம் உண்டாகும். இதனால் அவர்களுக்குச் சிறுநீரகக்கல் தோன்றும். மிகச் சிலருக்குப் 'பேராதையோடு' இயக்குநீர் மிகையாக பணிசெய்து இரத்தத்தில் கல்சியம் உப்பின் அளவை மிகைப்படுத்தும். அந்தச் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சிறுநீரகக்கல் உண்டாகலாம்.

> **மனித உடலில் சிறுநீரகக் கற்கள் தோன்றியது இன்று நேற்றல்ல. உலகில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே சிறுநீரகக் கற்களும் தோன்றியிருக்கின்றன. இதற்கான சரித்திர ஆதாரங்கள் நிறைய உள்ளன.**

**கற்கள் என்ன செய்யும்**

உருவாகும் சிறுநீரகக் கற்கள் சும்மா இருப்பதில்லை. சிறுநீரகத்தையே பாதிக்கத் தொடங்கிவிடும். அது எப்படி என்றால்...




சிறுநீரகக்கல் சிறுநீர்ப் பாதையில் எந்த இடத்தில் தோன்றினாலும் முதலில் அது சிறுநீர் ஓட்டத்தைத் தடை செய்யும். இதன் விளைவாக சிறுநீரகத்திலோ, சிறுநீர்ப் பையிலோ சிறுநீர் தேவையின்றி தேங்கி நிற்கும்.

இது சிறுநீரகத்திற்குப் பின்னழுத்தத்தை (Back Pressure) கொடுக்கும். இதனால் சிறுநீரகம் வீங்கும்.

வீங்கிய சிறுநீரகத்தில் நோய்க்கிருமிகள் எளிதாகத் தோற்றிக்கொள்ளும். விரைவிலேயே சிறுநீரகம் பழுதடையும். சில ஆண்டுகளில் சிறுநீரகம் செயலிழந்து சிறுநீர் பிரிவதில் சிக்கல் உண்டாகும். இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

**கற்கள் இருப்பதை அறிவது எப்படி?**

சிறுநீரகத்தில் கற்கள் இருந்தால் பக்க முதுகின் விலா எலும்புகளுக்குக் கீழ் திடீரெனக் கடுமையான வலி உண்டாகி முன் வயிற்றுக்குப் பரவும். கற்கள் சிறு நீர்ப்பை இணைப்புக் குழாய்களில் இருந்தால் அடிவயிற்றில் வலி தோன்றி பிறப்புறுப்புக்கும் பரவும்.

**டாக்டர் கு.கணேசன் எம்.பி.பி.எஸ்**

சிறுநீர்ப்பையில் கல் இருந்தால் தொப்புளுக்குக் கீழே வலி ஆரம்பமாகி சிறு நீர்ப் புறவழியின் நுனி வரை பரவும்.

அதனுடன் சிறுநீர் கழிப்பதில் சிரமம், வலி, எரிச்சல், அடிக்கடி சிறு நீர் வருதல் போன்ற உணர்வு. சிறுநீரில் இரத்தம் வருதல், நீர்க் கடுப்பு போன்ற வேறு சில சமயங்களில் கற்களோடு நோய்த் தொற்றும் சேர்ந்து கொள்வதால் குளிர்காய்ச்சல் வரக் கூடும்.

இன்னும் சிலருக்குச் சிறுநீர் சிறிதும் வெளியேறாமல் சிறுநீர்ப்பை வீங்கிக் கொள்வதால் அடிவயிறு உப்பிப் பெருக்கும். அடிவயிற்று வலியும் கடுமையாகும். (தொடரும்)

## யாழ்.நகரில்

# மாபெரும் கண்காட்சியும் களியாட்டவிழாவும் 27முதல் 29வரை

"யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு" என்ற மகுடத்தில் யாழ்.குடாநாட்டில் வாழும் மக்களுக்காக தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சி இவ்வார இறுதியில் மிகவும் கோலாகலமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியும் களியாட்ட விழாவும் யாழ்.பாதுகாப்புப் படைகளின் தலைமை யகத்தின் ஏற்பாட்டில் சமாதானச் செயலகத்தின் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தின் அரச நிறுவனங்களினதும் தனியார் வர்த்தக சமூகத்தினதும் அனுசரணையில் நடைபெறும் என்று படைத் தரப்பினர் நேற்று முன்தினம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியை இம் மாதம் 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று தினங்கள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி வளாகங்களில் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கண்காட்சி தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாவதுடன் இதற்கென யாழ். குடா நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந் தும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் இலத்திரனியல் ஊடகம் பற்றிய அறிவையும் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுவதுடன் அதன்மூலம் அவர்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதும் அவர்களிடத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தும் இக்கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும். அத்துடன் சிறுகைத் தொழில்களில் ஈடுபடுவோருக்கு அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்து கொள்ளும் முகமாக கிரமமானதும் வெற்றிகரமானதுமான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் கடற்தொழிலாளர்கள் மற்றும் விவசாயத் துறையினருக்கு அவர்களின் தொழிலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டுத் துறைசார்ந்த நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது பற்றி அவர்களை அறிவுறுத்துவதும் இக் கண்காட்சியின் முக்கிய அம்சமாகும். அவை குறித்த பயிற்சிகளை வழங்கி அதன்மூலம் சிறந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த இது அரியதொரு சந்தர்ப்பம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**விற்பனைக் கூடங்கள்**

இந்த தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சியில் சீ.ஐ.சீ.அக்றோ, லங்கெம், சொலெக், அரசாங்க கடற்றொழில் கூட்டுத் தாபனம், அபான்ஸ், மொபிடெல், டயலொக், கல்டெக்ஸ், ரிச்சட் பீரிஸ், ரணகொத் என்ரபிறைசஸ், கொக்கோக்கோலா, எலிபண்ட் ஹவுஸ் நிறுவனங்கள் உட்பட மேலும் பல வர்த்தக நிறுவனங்களின் காட்சியறைகளும் மற்றும் விற்பனை அங்காடிகளும் கொழும்பு நூல் வெளியீட்டாளர் சங்கத்தின் விற்பனை அங்காடிகளும் அடங்கும்.

அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளின் நடமாடும் சேவையினூடாக இங்கு சேவைகள் வழங்கப்படும்.

சிறுவர்களைக் களிப்பூட்ட "மெரிகோரவுண்ட்" விளையாட்டு, புகைவண்டி, அபாயக் கிணறு, கத்தரி ஊஞ்சல் உட்பட மேலும் பல களியாட்ட நிகழ்வுகளும், சீதுவை, சக்குரா, இசைக் குழுவுடன் நாட்டின் பிரபல தமிழ், சிங்களப் பாடகர் பாடகிகள் பலர் கலந்து கொள்ளும் இசைக் கச்சேரியும் மூன்று நாட்கள் இடம்பெறும்.

**வடக்கின் தாரகைப் போட்டி**

இதேவேளை, மேலும் யாழ்.குடாநாட்டில் பாடும் திறமைகொண்ட அனைவருக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வடக்கின் தாரகை"யைத் தேர்ந்தெடுக்கும் மாபெரும் பாடல் போட்டியின் ஆரம்பப் போட்டிகள் தற்போது பிரதேச செயலக மட்டத்தில் நடைபெறுவதுடன் அதன் மாபெரும் இறுதிப் போட்டி 29 ஆம் திகதி கண்காட்சி வளாகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறும்.

வடக்கின் தாரகையாகத் தெரிவுசெய்யப்படுபவருக்கு 15இலட்சம் ரூபா பெறுமதியான மாருதி கார் ஒன்றும் பரிசாக வழங்கப்படுவதுடன், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு பெறுமதி மிக்க கைஉழவு இயந்திரம் ஒன்றும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு பஜாஜ் டிஸ்கவரி மோட்டார் சைக்கிள் ஒன்றும் பரிசாக வழங்கப்படும்.

அத்துடன் நான்காவது இடத்திலிருந்து பத்தாவது இடம்வரையிலான வெற்றியாளர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் பணப் பரிசு வழங்கப்படும். யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையில் இக்காட்சி நடத்தப்படுவதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஷவாயு மழை பெய்தாலும் பின்வாங்கச் செய்ய முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளின் போது படையினர் மீது விஷவாயு மழை பெய்தாலும் அவர்களை பின் வாங்கச் செய்ய முடியாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிப்படையாகத் தெரியும் மற்றும் தெரியாத எதிரிகளை படையினர் வெற்றிகரமாக வீழ்த்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

படையினர் அடையும் வெற்றிகள் குறித்தமக்கள் கோஷத்தின் முன்னால் கிளிநொச்சியிலிருந்து வெளிப்படும் துப்பாக்கிச் சத்தங்கள் வலுவிழந்து வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தியத்தலாவை இராணுவ முகாமில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளை ஒன்றை இராணுவத்திற்கு வழங்கக் கூடிய தக்க தருணம் இதுவென பெற்றோரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டை பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் முன்னொரு போதும் இல்லாத வகையில் சூடு பிடித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை முடிவுகள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

*(நேற்றைய தொடர்ச்சி)*

எஸ்.சச்சிதானந்தன் -பண்டத்தரிப்பு (84), கே.சிவாஜினி- கரவெட்டி மத்தி(84),ரி.சுகந்தி-நெல்லியடி வடக்கு(84),கே.சுரேஸ்-கொம்மாந்துறை(84),ரி.சுபாசினி- கொக்குவில் மேற்கு(84),கே. தவச்செல்வி -திருநெல்வேலி (84),எஸ். சத்தியசிவம்-பண்டத்தரிப்பு (84),கே. சுதர்சினி-அரியாலை(84), பி. ஜசோதா- உரும்பிராய் வடக்கு(84), ரி.ரஞ்சித்குமார்-மானிப்பாய்(84).

பி.சியாம கிருஷ்ணா -கொக்குவில் (84), எம்.லதா-சுன்னாகம் மேற்கு(84), என். செந்தூரன் -அல்வாய் மேற்கு(84), எ.ஜெயப்பிரியா-கைதடி தெற்கு(84),ரி.ஜெயமலர்-வட்டுத்தெற்கு(84),எஸ்.ரேவதி- மன்னார் (84),எஸ்.லூசியா-மன்னார் (84), எம்.எல். மரியகிரிஸ்ரா-மன்னார்(84), எஸ்.செல்வரட்ணம் -வவுனியா(84),எம்.பத்மபிரியா-வைரவப்புளியங்குளம்(84),ஜே.ஸ்ரீரங்கன்-சிவபுரம்(84),கே. கிருபாகினி-கந்தர்மடம்(84), ஜெ.எல்.சௌந்தரநாயகி- பட்டாணிச்சு (84), எஸ்.சிவகுமார்-கணேசபுரம் (84).

எஸ். ஜெயவாணி ஆனைக்கோட்டை (84),எம். நகுலேஸ்வரி- கொடிகாமம் (84), பி.வசீகரன் தும்பளை (84),ஆர்.பிரசாந்தி-நீராவியடி (84), ரி.குமார தாஸ்-இணுவில் மேற்கு (84),எஸ்.காயத்திரி-இருபாலை (84),வி.விஜிதா-மானிப்பாய் (84), பி.ஜசேந்தினி-கொக்குவில் கிழக்கு (84),எம். கோணேஸ்வரா-சுன்னாகம்(84), பி.வயலட் சுபாசினி -சுன் னாகம்(84), வி. தனுஷ்யா-புலோலி வடமேற்கு (84), கே.செல்வ குமார்-கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்(84), எஸ். சயந்தினி -நீராவியடி(84).

வி.தாட்சாயினி- ஏழாலை மேற்கு(84), வை.சசிதரன் -அரியாலை மத்தி(84), ரி.ஜெயவதனி -வரணி(84),எஸ்.அன்ரன் சுதாகரன் -மானிப்பாய்(84), ஜே.நல்லை நாதன் -நல்லூர் தெற்கு(84),ரி.மயூரதன்-ஏழாலை மேற்கு(84),கே.வளர்மதி-கொடிகாமம்(84), வி.விஜிதா -இணுவில் கிழக்கு(84), என். தங்கராஜா-புலோலி தென்மேற்கு(84), ஐ.கஜேந்திரன் -மல்லாகம்(84), ஆர்.ரகுபாலன் -அராலி வடக்கு(84), எஸ்.செல்லப்பா - ஆனைப்பந்தி(84), எஸ்.உதயகுமார் -சாவகச்சேரி(84),ரி.திருமகள் -சாவகச்சேரி (84), என்.கஜந்தினி-அரியாலை(84), கே.ஆனந்தி-நீர்வேலி மத்தி(84), என் .சிவநந்தினி-புலோலி தெற்கு(84), எஸ்.மதுராம்பிகை -கரவெட்டி(84),ரி.மஞ்சுரன்-மீசாலை கிழக்கு(84),எஸ்.முருகேசு -புலோலி தெற்கு(84).

எஸ்.யோகவதி -சாவற்காடு(84), கே. சுரேஸ்குமார் -உப்புக்குளம் (84), எஸ்.என். தயபரோ-வங்காலை(84), கே. டீபேன் - தோணிக்கல் (84), வி. சண்முகலிங்கம் - வவுனியா (84), எஸ். கிருசாந்தா - வவுனியா (84), எஸ். குமுதினி - திருநகர் தெற்கு (84), கே. துசிகரன் -ஸ்கந்தபுரம் (84), எஸ். யமுனா -ஸ்கந்தபுரம் (84), வி. அருள்ராஜா - வட்டக்கச்சி (84), கே. ரூபிகா - நாவற் குழி (84), எஸ். தவராணி - பொலிகண்டி மேற்கு (84), கே. கடம்பவேதி - உக்கிராங் குளம் (84), எம். தயாநிதி - பூமாங்குளம் (84), எம். ரூபதன் - இடைக்குறிச்சி மேற்கு (84), எஸ். சிவாஜினி - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (82).

பி.கமலினி-பொலிகண்டிமேற்கு(82), எஸ். கோகிலா - கரவெட்டி தெற்கு (82), எஸ். நவநேசன் - கோண்டா வில் மேற்கு (82), எஸ். சாந்தரூபி - துன்னாலை மத்தி (82), கே. ரதிவதனி - உடுப்பிட்டி (82), கே. மங்கலேசன் - ஏழாலை மேற்கு (82), ரி. ராஜகுமார் - தாவடி மேற்கு (82), வி. பார்த்தீபன் - வல்வெட்டித் துறை (82).

எஸ். தர்மதாஸ் - உடுவில் (82), எஸ். பிரசாந்தன் - பொலிகண்டி (82), கே. எவ்.எ. சஞ்சீவ்குமார் - மன்னார் (82), எம்.டி.ஸ்ரானி - முருங்கன் (82), எஸ். முகர்ஜிறின் - நெரிய குளம் (82), கே. தயாளினி - உக் கிராங்குளம் (82), எ.பி. சூசையப்பு - மன்னார் (82), கே. சிவகரன் - வரணி (82), என். இராம தாஸ் - மயிலணி வடக்கு (82), ரி. சகாதேவன் - பலாலிவீதி, யாழ்ப்பாணம் (82), எஸ். அருட்செல்வம் -கரவெட்டி (82).

எஸ். சாதனா - கரணவாய் (82), எஸ். நடேசன் - துன்னாலை மத்தி (82), எம். நிரேஸ் - இமையாணன் கிழக்கு (82), எஸ். கனகேஸ்வரி - செட்டிக்குளம் (82), ஆர். கையில நாயகி - வட்டு மேற்கு (82), பி. உஷேனி - ஆனைக்கோட்டை (82), எம். ரோகினி - மானிப்பாய் (82), ஆர். சிவதாசன் - சாவகச்சேரி (82), ஆர். அன்பரசி - நல்லூர் (82), ஜி.பிரபாஜினி - அல்வாய் கிழக்கு (82), பி. விஷ் ணுபதி - அச்சுவேலி (82), பி. நடராஜா - தொண்டமனாறு (82), என் முரளிதரன் - திருநெல்வேலி வடக்கு (82), ஜி. மெறின் நிஷாந்தினி - சில்லாலை தெற்கு (82), எ. சாந்தி - கரணவாய் தெற்கு (82).

எம். பிரணவரூபன் – பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (82), எஸ். கருணாநிதி – வரணி (82), எம். ஜெயந் திரபாலா - நல்லூர் (82), ஐ. சசிகரன் – தொண்ட மனாறு (82), வி. நயனா – கொக்குவில் கிழக்கு (82), ஜே. கோமதி - மூளாய் (82), பி. தயா பரன் – தாவடி (82), வி. பாலமுருகன் – கொக்கு வில் கிழக்கு (82), ஆர். சதீஸ் - வட்டு வடக்கு (82), கே. தர்சினி - சுன்னாகம் (82), எம். சீமாட்டி – மீசாலை மேற்கு (82), பி. கவிநாயகி - நீர்வேலி மேற்கு (82), எஸ். சங்கீதா - நல்லூர் வடக்கு (82), பி. யசோதா - மயிலணி (82), எஸ். ரம்யா - கோப்பாய் மத்தி (82), பி. உமா - புலோலி வடக்கு (82), எஸ். மஞ்சுளா – கைதடி வடக்கு (82).

இ. இளங்கீரன் – நீராவியடி (82), கே. ராதிகா - குருமன்காடு (82), கே. சறோசா - வரணி (82), எஸ். தர்சன் - தொண்டமனாறு (82), பி. சிவறஞ்சன் - கிளிநொச்சி(82), இ. எஸ். குரூஸ் - மன்னார் (82), இ. என். யூட் இமா கிளின்டா - மன்னார்(82), எஸ். மௌவீரா - மன்னார் (82), பி. வளர்மதி - கணேசபுரம் (82), எம். இன்பமதி – வவுனியா (82), பி. பால முரளிதரன் – கிளிநொச்சி(82), ரி. சிவகரன் – கிளிநொச்சி(82), எ. கனகசபாவதி - வவுனியா (82), பி.பிரவீனா - கொக்குவில் கிழக்கு (80).

எ. கலையோதி - ஆவரங்கால் மேற்கு (80), கே.ரி. செல்வராஜா – அச்சுவேலி தெற்கு (80), ஆர். பிரேமளா - கைதடி கிழக்கு (80), ரி. தயாளினி – வடலியடைப்பு (80), பி. உமேஸ்குமார் – உடுவில் (80), ஆர். புவிராஜா – விசுவமடு (80), எஸ். சிவலோஜினி - பூந்தோட்டம் (80), ஜி. ஒலிவெட் தாரணி - சுண்டுக்குழி (80), பி. குகநந்தன் - வவுனியா (80), சி. கஜமுகன் - சுன்னாகம் (80), என். சிவானந்தன் – வதிரி (80), என். சின்னத்தம்பி - சாவகச்சேரி (80), ஆர். நளினி - சுழிபுரம் (80), ஜெ. வேலாயுதம் - புலோலி மேற்கு (80), வி. சண் முகராஜா –கரணவாய் கிழக்கு (80), ரி. மதனா - கரவெட்டி (80), என். சசிக்குமார் – மானிப் பாய் (80).

என். சகிகலா - வவுனியா (80), வி. நிக்கலஸ் - கொழும்புத்துறை (80), எஸ். சத்தியபாமா - கொடிகாமம் (80), பிரபோசங்கர் - கரவெட்டி வடக்கு (80), பி. சத்தியமூர்த்தி - இணுவில் தெற்கு (80), ரி. சுபராஜினி - ஆனைக்கோட்டை (80), பி. பாமா - நெல்லியடி (80), என். சியாமினி - வல்வெட்டித்துறை (80), எ. சுகந்தினி - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (80), இ. எஸ் ரஞ்சித்ராஜா – ஆனைக்கோட்டை (80), வி. சுபாஜினி – நல்லூர் (80), என். ரமேஸ்வரன் – ஏழாலை கிழக்கு (80), எஸ். சிவகுமார் – மீசாலை மேற்கு (80), ஆர்.ரவிதேவி - ஆவரங்கால் மேற்கு (80), கே. சைலஜா - கல்லடி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் (80).

ஆர். லக்கி – வவுனியா (80), என். பிருந்தா – சாவகச்சேரி (80),எஸ். உஷாந்தினி – உடுப்பிட்டி (80), எஸ். பகிரதன் - தொண்டமனாறு (80), ரி. தர்சன் – தொண்டமனாறு (80), பி. விக்னேஸ்வரன் - கைதடி (80), ரி. பகிரதராஜ் - கொக்குவில் மேற்கு (80).

எஸ். பாலசுப்பிரமணியம் - மட்டு வில் தெற்கு (80), பி. இளநங்கை - கரவெட்டி கிழக்கு (80), வை. வி. கருணாபதி – மீசாலை கிழக்கு (80), எஸ். வனிதா - யாழ்ப் பாணம் (80), எஸ். அமு தினி – கொக்குவில் (80), கே. யூட்சிபாகரன் - உயிலங்குளம் (80), ரி. விக்னேஸ்வரன் - சுன்னாகம் (80), பி. சசிகாந்தா – சுன்னாகம் (80), என். இரா ஜேந்திரம் - கல்வியங்கரன் (80), எஸ் சுதா கரன் - கொக்குவில் (80), எஸ். சதீஸ் பிரியா - பொலிகண்டி (80).

ஆர். காயத்திரி – கரவெட்டி (80), எஸ். நிர்மலா – மன்னார் (80), எஸ்.எஸ். ரி. பீரிஸ் – மன்னார் (80), எம். வசந்திமாலா - பேசாலை (80), எஸ். நளினி - முல்லைத்தீவு (80), என். பிரேமலோஜினி - தோணிக்கல் (80), எஸ். சிவகௌரி – வேப்பங்குளம் (80), வி. பபிலினி – தோணிக்கல் (80), எஸ். மேனகா – வைரவப் புளியங்குளம் (80), என். சுபாஜனா – தோணிக்கல் (80).

(முற்றும்)

## விடுதலை சிறுத்தைகளின் சென்னை மாநாட்டுக்கு தடை

(சென்னை)

சென்னை அமிஞ்சிகரை-புல்லாரெட்டி அவனியூவில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழீழ அங்கீகார மாநாடு எதிர் வரும் 26ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. இந்நிலையில் இந்த மாநாட்டுக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இதுதொடர்பாக, பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது,

விடுதலைச் சிறுத் தைகள் கட்சியின் சார்பில் சென்னையில் நடைபெறவிருந்த தமிழீழ அங்கீகார மாநாட் டில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவார்கள் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையில் அந்த மாநாட்டுக்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

அதேநேரத்தில் புல்லாரெட்டி அவனியூவில் மாநாடு நடத்தினால் வாகனங்களை செல்ல வழிவிடவேண்டும் என்று உயர் நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தமாநாட்டுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன. இதுபோன்ற காரணங்களாலும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்றார். (5)

## கண்காட்சிக்கான ஆக்கப் பொருட்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் இம்மாதம் 27,28,29 ஆம்திகதிகளில் இடம் பெறவுள்ள கண்காட்சியில் காட்சிப்படுத்தவுள்ள ஆக்கப்பொருட்கள் ,அதனை அளிக்கும் மாணவர்கள்,அவர்கள் கற்கும் பாடசாலை ஆகிய விபரங்கள் அடங்கிய விபரங்கள் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகள் காட்சிப் பொருட்களை இன்று காலை9மணிக்கு யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் ஒப்படைக்குமாறு யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.ஆக்கப் பொருள் பற்றிய பெயர் விபரங்கள் வருமாறு,

### தரம் 6

நீர்க்கடிகாரம்–சி.டுகிந்தன் (சென் ஜோன்ஸ் கல்லூரி),நவீன தபால் பெட்டி–பி.காயத்திரி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),அமுத்தசக்தி-இயக்கசக்தி, பந்தெறியும்–ஏ.அருண்குமார் (சென்பற்றிக்ஸ் கல்லூரி) ,மணற்கடிகாரம்–ஆர். யசோதரன் (சென்மேரிஸ் வித்தி., ஞாயிற்றுத் தொகுதி–சுபாகரன்–(சென்ஜோன்ஸ் கல்லூரி),

### தரம் 7

மின்னடுப்பு–கு.குஷாத், த.கமலதீபன் (அச்சுவேலி மத்தியகல்லூரி), நீளத்துடன் தடைமாறல்-பி.கௌதமன் (கோப்பாய் ம.வி.),காற்றில்ஓடும் வண்டி- எஸ்.தினேஷ் (சென்பற்றிக்ஸ் கல்லூரி),எரிமலை–ஜே.மேஸ்ஹக் (சென்ஜோன்ஸ் கல்லூரி),தன்னியக்க புகையிரத கடவை–கு.குகாஷினி, பி.டிலக்ஷிகா , அ.கடிதாயினி(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

### தரம் 8

திக்லைட்,அ.ஜெனோசன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி),கொடியேற்றல்–வி.கோகுலதாஸ்–(கோண்டாவில் இந்துக் க ல்லூரி), AC-DC -கு.கீர்த்தனா (வேம்படி மகளிர் கல்லூரி), நீர் தூயதாக்கி–தெ.கீர்த்தனா(கொக்குவில் இராமகிருஷ்ணா), ஆடை உலர்த்தி–வே. தயாளன்–(கொட்டடி நமசிவாய வித்தி.)

### தரம் 9

Electric gate-ரி. வைதே (யாழ்.இந்துக் கல்லூரி), த.யதார்த்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), OHP -க.சுதாகர், எஸ்.விஜிதரன், திரியமாபகசர்மா(யாழ்.இந்துக் கல்லூரி), ஈருலோக சட்டம்–சிறிதுஜா–(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கண்மாதிரி உரு–அ.சிவசங்கர் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.

### தரம் 10

பெக்சோ லொறி–சி.யசிந்தன் (யாழ்.மத்திய கல்லூரி), Digital Display -ரா.சாரேன் (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி., மின்னாடை உலர்த்தி- து.டிலக்ஷன் (இடைக்காடு ம.வி.),தொகுதிச் சுற்றோட்டம்–க.அம்புஜன்(யாழ்.மத்திய கல்லூரி), வழுக்கிப் பொறி–ச.ஜனார்த்தன்(அச்சுவேலி சரஸ்வதி வித்தி.)

### தரம்11

Automatic Water Level Controller -ரவீந்திரன்,ரவிவர்மன், செல்வநாதன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), Vehicle Controling Light- ம.பொன்சேகர் (இடைக்காடு ம.வி.) பறத்தல் தத்துவ விமானம் –ரி. ஷரிசாந்,பி.ரவீந்திரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சூரிய ஒளி சுடுநீர் ஆவியாக்கல்–ரி.மதுராஜ்(கொக்குவில் இந்துக் கல்லூரி), அசற்றோல் விளக்கு –சி.சிவதர்சினி (வேம்படி மகளிர் கல்லூரி).

### தரம் 12,13

துடிக்கும் இதயம் சூழல் மாசடைதலும் முகாமையும்(வேம்டி மகளிர் கல்லூரி),இலகு பொறி, தன்னியக்க நீர்த் தொகுதி, பாதுகாப்பான அசையும் மாறிலி(சுண்டுக் குளி மகளிர் கல்லூரி), அப்பிள் மேல்நோக்கி, Electric pen -(சென்ஜோன்ஸ் கல்லூரி), இரவுநேர விளக்கு,மரக்கறி வெட்டும் உபகரணம்(யாழ்.மத்திய கல்லூரி). (ஓ)




WP:CT/1123

COM BANK e Exchange மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தை பெறுவித்து

## ரூ.12 இலட்சம் பணப் பரிசில்களை வெல்லுங்கள்!

**டிசம்பர் மாதம் முதல் எதிர்வரும் ஏப்ரல் 2009 வரை**

**மாதாந்தம் 3 வெற்றியாளர்களுக்கு தலா ரூ.100,000/=**

**இன்றே** Com Bank e Exchange மூலமாக பணத்தை அனுப்பும் படி வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிவியுங்கள். Com Bank e Exchange அதி விரைவானது,நம்பிக்கையானது, இலங்கையின் எப்பகுதியிலும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 5 667 679, 011 2 353 353

COMBANK
Exchange
MONEY TRANSFER

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலனே எங்கள் நோக்கம்

நாய்க்குத் தவிசு (அரசிருக்கை) இட்டாலும் அது குரைக்கவே செய்யும்.

~ இந்தியா

## யாழ்ப்பாண வீதிகளெங்கும் நாய்களின் தொல்லை

யாழ்.மாவட்டத்தில் நாய்களின் பெருக்கம் அதிகரித்துவிட்டது. இதனால் வீதியெங்கும் நாய்களின் தொல்லை தாங்கமுடியாதென்ற அளவிற்குச் சென்றுள்ளது.

நாய் வளர்ப்பவர்கள் தங்கள் நாய்களை வீதிகளில் விடுவதை நியாயமெனக் கருதிச் செயற்படுகின்றனர்.

இந்தப் பொறுப்பற்ற செயலைத் தடுக்கவும், தவிர்க்கவும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படாமை வேதனைக்குரியதாகும்.

வீதிகளில் நாய்கள் நடமாடுவதால் விபத்துகள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதற்கு மேலாக சந்தைகள், பொது இடங்களில் தெருநாய்களின் தொல்லை போதுமென்றாகிவிட்டது.

வீதியோரங்களில் குப்பைகளைக் குவிக்கும் பொறுப்பற்ற செயல் ஒருபுறத்தில் நடக்க, அந்தக் குப்பைகளை கிளறும் நாய்கள் அவற்றை வீதியில் போட்டுவிடுகின்றன.

இதனால் நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் அபாயத்துடன் வீதியில் பயணிப்போர் தட்டுண்டு கீழே விழும் பரிதாபமும் நடந்தேறுகின்றது.

இதற்கு அப்பால் தெரு நாய்களின் தொல்லை– விசர்நாய்க்கடி போன்றவற்றினால் மரணங்கள் நிகழ்ந்த சந்தர்ப்பங்களும் நிகழும் வாய்ப்புக்களும் உண்டு.

எனவே வீதிகளில், நடமாடும் நாய்கள் தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும்.

மகிந்த சிந்தனைப்படி நாய்களுக்கு எதுவுமே செய்ய முடியாதெனக் கூறுவதென்பது தமக்குரிய பொறுப்பையும் கடமையையும் தட்டிக்கழிக்கும் செயலாகவே கருதப்படும்.

நாய்களைக் கொல்வதற்கு மகிந்த சிந்தனை தடை செய்வதாகக் கூறுவோர் நாய்த் தொல்லையைத் தடுப்பதற்கான மாற்று வழி குறித்து சிந்திக்க வேண்டும்.

இல்லையேல் யாழ்ப்பாணம் முழுவதிலும் தெருநாய்களின் தொல்லைகள் விரிவு பெற்றுவிடும். இவை உள்ளூராட்சி சபைகளின் கடமையாக இருக்க மறுபுறத்தில், நாய் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

உள்ளூராட்சி சட்டங்களின் பிரகாரம் வளர்ப்பு நாய்கள் என்பது வீட்டு எல்லைக்குள் நிற்பதாக இருக்கவேண்டும்.

வீட்டிற்கு வெளியே – வீதிக்கு வந்துவிட்டால் அந்த நாய்களும் தெருநாய்களாகவே கருதப்படும்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அநேக இடங்களில் வீட்டு உறுப்பினர்கள் தமது வீட்டுக்கு வெளியே கூடி நின்று கதையளப்பர்.

வெளியில் நிற்கும் அவர்களின் வளர்ப்பு நாய்கள் வீதியால் போவோர், வருவோரைத் துரத்திக் கொள்ளும். கதைப் பராக்கில் நாயின் செயல் அவர்களுக்கு ஆனந்தமாக அமையும்.

சில வேளைகளில் அதுவே பெரும் வீதிச் சண்டையாகவும் மாறும். எனவே பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதன் மூலம் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் நாய்த்தொல்லையை நீக்க முடியும்.

# சட்டவிரோத மருந்துப்பொருட்கள் இறக்குமதி செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களை கண்டறிவதற்காக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக சகல மாவட்டங்களிலும் விசேட அதிகாரிகள் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளதாக அமைச்சின் மருந்து விநியோகப்பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கேமந்த பரணகம கூறியுள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்கென ஆயிரத்து 300ற்கும் மேற்பட்ட மருந்துப்பொருட்கள் சுகாதார அமைச்சினால் தற்போது இறக்குமதி செய்யப் பட்டுள்ளன.

அமைச்சின் அனுமதியுடன் மேலும் பல மருந்துப் பொருட்களை தனியார் துறையூடாகவும் இறக்குமதி செய்யவுள்ளதாக மருந்து விநியோகப்பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

எனினும், தரம் குறைந்த மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை சிலர் அனுமதியின்றி இறக்குமதி செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய மருந்துப்பொருள் விற்பனை நிலையங்களில் அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்வதற்கும் அத்தகைய வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் கூறினார். (ஓ-2)

# கொழும்புக்கு வரும் பயணிகள் தங்குவதற்கு 'கொழும்பு' இல்லம்

## போக்குவரத்து அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிமாவட்டங்களில் இருந்து அவசர தேவைகளின் பொருட்டு கொழும்புக்கு வரும் நடுத்தர வர்க்கத்தினர் தங்குவதற்கு இட வசதியின்றி பஸ் நிலையங்களிலும் ரயில் நிலையங்களிலும் படுத்துறங்குகின்றனர். அவர்களின் துயரத்தை போக்கும் வகையில் பாதுகாப்பான தங்குமிட வசதி ஒன்றை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன்கொழும்பு இல்லம் அமையவுள்ளது. இன்னும் இரண்டு வருட காலப்பகுதியில் இது பூர்த்தி செய்து மக்களுக்கு அர்ப்பணிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சினால் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி கொழும்பு இல்லத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் காலை கொழும்பு கோட்டை புகையிரத நிலைய களஞ்சிய சாலைப்பகுதியில் நடைபெற்றது.

தேசிய ஊடகங்களின் பிரதம ஆசிரியர்கள் சகிதம் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு அவசர தேவைகளின் நிமித்தம் வருவோர் பாதுகாப்பாக தங்க முடியாத நிலையில் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர்.

குறிப்பாக தாய்மார்,இளம் பெண்கள் ஆகியோர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் தங்கள் வசமுள்ள பொருட்களையும் இழந்துள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு பாதுகாப்பான இடம் ஒன்றை அமைத்துக் கொடுக் கும் நோக்குடனேயே இக்கொழும்பு இல்லம் அங்குரார்ப் பணம் செய்யப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராக இருந்த போது இவ்வாறு ஓர் இல்லம் அமைக்கப்படவேண்டும் என்ற சிந்தனையை முன் வைத்தார். எனினும் கால ஓட்டத்தில் அது சாத்தியமாகவில்லை. இந்நிலையில் ஜனாதிபதியின் கருத்தில் உதித்த இத் திட்டமானது மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

இந்த இல்லத்தில் தங்க வருவோர் தாங்கள் பயணம் செய்த பயணச்சீட்டைக்காட்டி அனுமதிபெறக்கூடியதாக இருக்கும். நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் மாத்திரமே அறவிடப்படும். மதகுருமாருக்கு பிரத்தியோகமான வசதிகளும் இங்கு அமைந்திருக்கும்.இரண்டு மாடிகளைக்கொண்ட இக்கட்டடத்தில் மக்கள் தங்கியிருக்க போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மக்களுக்கு சிறந்த போக்குவரத்து வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் தன்னால் ஆனா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் செய்த போது ரயில் சேவையை நவீனப்படுத்தும் வகையில் புதிய ரயில் எஞ்சின்களை கோரியிருந்தார். இதற்கமைய சீனா 15 புதிய ரயில் எஞ்சின்களை மிகக் குறைந்த விலையில் இலங்கைக்கு வழங்கியது. இதன் மூலம் நாம் ரயில் சேவையை சீராக நடத்தக் கூடியதாகவுள்ளது.

இலங்கையின் போக்குவரத்துச் சேவையை மிகச் சிறந்த சேவையாக மாற்றியமைத்து அனைத்து மக்களும் இதனை முழுமையாகப்பயன்படுத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதே எமது நோக்கமாகும். இந்தநோக்கத்திற்கு உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நான் கோருகிறேன் என்றார்.(ஓ-6)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீது தாக்குதல நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக வெளியான தகவல்களை அடுத்து விமான நிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விமான நிலையம் மீது தாக்குதல் நடத்தப்போவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் இதனைத்தடுப்பதற்கு பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

புதிய பாதுகாப்பு நடைமுறைக்கு அமைய கட்டுநாயக்க விமான நிலை யத்தின் ஊடாக வெளிநாடு செல்லும் வெளிநாட்டவர்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

இதேவேளை வெளிநாடு செல்லும் பயணிகள் மற்றும் அவர்களுடன் துணைக்குச் செல்பவர்கள் விமான நிலைத்திற்கு வெளியில் உள்ள சோதனைச்சாவடியில் இறக்கப்பட்டு அங்கிருந்து பேருந்தின் மூலமே விமான நிலையத்திற்குள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அவ்வாறான நடவடிக் கைகள் எதுவும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை என கடந்த சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்கா விமானநிலையம் சென்று திரும்பிய நபர் ஒருவர் கூறினார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## பலவீனமே மரணம்



வேட்டையில் துரத்தப்படுகின்ற முயல்களைப்போல் நாமும் பயங்கரமானவற்றைக்கண்டு எப்படி ஓட்டம் பிடிக்கிறோம்! அந்த முயல்களைப்போலவே தலைகளை மறைத்துக்கொண்டு ,நாம்பாது காப்பாக இருப்பதாகவும் நினைக்கிறோம். பயங்கரமான அனைத்தில் இருந்தும் உலகம் ஓடுவதைப்பாருங்கள்.

ஒரு முறை நாம் காசியில் இருந்தபோது ,ஒருபக்கம் பெரியகுளமும் மறு பக்கம் உயர்ந்த சுவருமாக இருந்த ஒரு பாதைவழியாகப் போகவேண்டி இருந்தது. அங்கே குரங்குகள் ஏராளம். காசியில் உள்ள குரங்குகள் பெரியவை. சில வேளைகளில் பொல்லாதவை. தங்கள் பாதை வழியாக என்னை போகவிடக்கூடாது என்று நினைத்துக் கொண்டனர் போலும்! கிறீச்என்று கூச்சலிட்டபடியே என் காலின் மீது பாய்ந்தன. கூட்டமாக அவை என்னை நெருங்குவதைக் கண்ட நான் ஓடத்தொடங்கினேன். நான் ஓடஓட விடாமல் துரத்தி ,தொடர்ந்து கடிக்க ஆரம்பித்தன. தப்ப முடியாதோ என்று தோன் றிற்று அப்போது அங்கு வந்த ஒருவர் என்னைக் கூப்பிட்டு ,மிருகங்களை எதிர்த்து நில்லுங்கள் என்று கூறினார். நான் திரும்பி துணிவுடன் அவற்றை எதிர்த்து நின்றேன். அவ்வளவு தான் அந்தக்குரங்குகள் திரும்பி ஓடின.

நம் வாழ்வுக்கே இது ஒரு படிப்பினை பயங்கரவாதத்தை எதிர்கொள்ளுங்கள், தைரியமாக எதிர்த்து நில்லுங்கள். நாம் பயந்து ஓடவில்லை என்றால் , அந்தக்குரங்குக் கூட்டம் போலவே ,துன்பங்களும் ஓடிவிடும். சுதந்திரம் என்பது எப்போதாவது எமக்குக் கிடைக்கும் என்றால் அது இயற்கையை வெல்வதன் மூலமே தவிர , விலகி ஓடுவதா அல்ல. கோழைகள் ஒருபோதும் வெற்றி கண்டதில்லை. பயம் ,துன்பம் இவை அகல வேண்டும் என்று நாம் விரும்பினால் அவற்றை எதிர்த்து போராடியே தீர வேண்டும்.

# உயர் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்தாவிடின் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் நடக்கும்

## ஐ.தே.க.எம்.பி. பாலித ரங்க பண்டார

(கொழும்பு)

பெற்றோல் விலையை 100 ரூபாவாகக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு இரண்டு நாட்கள் கால அவகாசத்தினை ஐக்கிய தேசியக்கட்சி வழங்கியுள்ளது.

இரண்டு நாட்களுக்குள் நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்தாவிட்டால் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டா நேற்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 36.4 அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ளபோதும் இலங்கை அரசாங்கம் நீதிமன்றத்தீர்ப்பை ஏற்று பெற்றோலின் விலையை 100 ரூபாவாக கூட குறைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் பெரும்பாலானவர்கள் பெற்றோல் வாகனங்களைப் பயன்படுத்துவதால் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே 100ரூபாவிற்கு பெற்றோலை விற்பனை செய்யுமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதாக ரங்க பண்டார தெரிவித்தார்.

டீசலின் விலையை குறைக்குமாறும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஒரே நேரத்தில் அரசாங்கத்தின் வரி வருவாயில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என சுட்டிக்காட்டிய நீதிமன்றம் தற்பொழுது பெற்றோலின் விலையைக்குறைக்குமாறு உத்தரவிட்டது.

எதிர்வரும் பெப்ரவரி 16ஆம் திகதிக்குப் பின்னர் டீசலின் விலை பற்றி ஆராய்வோம் என நீதிமன்றம் கூறியிருந்தது என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு அரசாங்கத்தின் வரி வருவாய் பற்றிச் சிந்தித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கும் உயர் நீதிமன்றத்தை மதித்து அரசாங்கம் பெற்றோல் விலையைக்குறைக்க வேண்டும் எனவும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து வெளிநாட்டு நிறுவனமான ஐ.ஓ.சி. நிறுவனமே பெற்றோலின் விலையைக் குறைத்திருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை இலங்கை



அரசாங்கமே மதிக்காமலிருப்பதானது நாட்டு மக்கள் எந்தக்குற்றச்செயலிலும் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.(ஓ-6)

## கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்கள் வெளியேறுகின்றன?

யாழ். மாவட்டத்தில் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் பணிகளை இடை நிறுத்தி வெளியேறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் கலோரேஸ்ற் நிறுவனம் தனது பணிகளை ஒட்டுமொத்தமாக நிறுத்தியுள்ளதுடன் கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து தனது பணிகளை மட்டுப்படுத்தி ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

தற்போது தமது வாகனங்களை மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டுவரும் நாடுகளுக்கு இடம் மாற்றும் நடவடிக்கைகளை இவை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கண்ணிவெடிகளை அகற்றி வந்த டெனிஸ் நிறுவனமும் ஆட் குறைப்பு செய்துள்ளதுடன் தமது பணிகளை மட்டுப்படுத்தியுள்ளது. யாழ்பாணத்தில் 260 பணியாளர்களைக்கொண்டு சேவையாற்றிய இந் நிறுவணம் தற்போது 180 பேரை கொண்டு பணிகளை மட்டுப்படுத்தியுள்ளது. இந்த வருட இறுதியில் ஒப்பந்தம் முடிவடையவுள்ள நிலையில் வடக்கு கிழக்கில் இருந்து பணியாற்றும் உயர் அதிகாரிகள் இருவர் வெளியேறவுள்ளனர் எனத் தெரிய வருகிறது. (5)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மூட அரசாங்கம் மறைமுகமாக சதித்திட்டம்

## பொதுச் சேவைகள் சங்கம் குற்றச்சாட்டு

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை புறக் கணிப்பதன் மூலம் அதன் பின்னணியில் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தை மூடும் சதித்திட்டமே உள்ளது என்று இலங்கை பெற்றோலிய பொதுச்சேவைகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. அரசாங்கம், ஆயிரக்கணக்கான இராணு வத்தினர்,உயிர்த் தியாகம் செய்து பெற்ற வெற்றிகளை இந்தியாவுக்கு காட்டிக் கொடுத்துள்ளதுடன் நாட்டின் பொருளாதாரத்தை இந்தியா ஆக்கிரமிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை எரிபொருளின் ஊடாக பெற்றுக் கொடுத்துள்ளமை கண்டிக்கத்தக்கது என்றும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை பெற்றோலியப் பொதுச்சேவைகள் சங்கம் நேற்று முன்தினம் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அவ்வறிக்கையில்,

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறையும் போது அதன் பயனை மக்களுக்கு வழங்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. உயர் நீதிமன்ற அறிவிப்பின் படி லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் பெற்றோலின் விலையைக் 100 ரூபாவிற்கு குறைத்துள்ள போதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காத- தால் பெற்றோலின் விலையைக்குறைக்க முடியாதுள்ளது. இதன் மூலம் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம் மூடப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(5)


## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

**(ஹற்றன் நஷனல் வங்கி லிமிடெட் என முன்பு அறியப்படுவது)**
**1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல்(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**கிளை:- யாழ்ப்பாணம்**

**செல்வரட்ணம் திருவருட்செல்வம்**

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.பணிப்பாளர்கள் சபையினால் 2008ஆம் ஆண்டு 25 செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

செல்வரட்ணம் திருவருட் செல்வம் கடப்பாடுடையவராக,ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில் யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எம்.தியாகராஜாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005 மார்ச் 3ஆம் திகதியிடப்பட்ட 7891 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளமையாலும் , 2008 யூலை 31ஆம் திகதியன்று உள்ளவாறான ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது பதினொரு இலட்சத்து பதினெட்டாயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்று ரூபா இருபத்து ஐந்து சதம் ( ரூபா 1,118,671.25) தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபை யானது, 1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 7891 முறி மூலம் , ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. ஸ்தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும் ,வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,118,671.25 கொண்ட பணத் தொகை யை 2008 ஒகஸ்ட் 1ஆம் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை ,அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக,உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ.டபிள்யூ. ஜெய சூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

வடமேல் மாகாணம்,யாழ்ப்பாண மாவட்டம்,வலிகாமம் கிழக்குப்பிரிவில் உள்ள புத்தூர்,பாரிஷ் சின் ஆவரங்கால் "நீதித்தோட்டம்" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.அம்ரோசினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 1720/12.5.1970இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2ற்கு அமைய எல். எம். வீ.சி. மற்றும் 17.01 குளிகளைக்கொண்டுள்ள ஆதனத்தின் எல்லை கள் கிழக்கு காணித் துண்டு 10இல் காட்டப்பட்டுள்ள தண்ணீர் கால்வாய் வடக்கு காணித் துண்டு 9ஆக காட்டப்பட்டுள்ள காணி,மேற்கு யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதி ,தெற்குக் காணித் துண்டு 12 ஆக அடையாளமிடப்பட்டுள்ள காணி. இங்கு குறிப்பிட்ட அனைத் தும் கே. 511/197 இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**சபையின் கட்டளைக்கு அமைய**
**இந்திராணி குணசேகர,**
**பி.பொ.மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.**

(சி/1902)



## கலந்துரையாடல்

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அதிபர் தலைமையில் நாளை 24.12.2008 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்
வி.மாணிக்கம்

(சி/1903)



## திருமதி சரோஜனாதேவி வேலாயுதம்



யாழ். வலய முன்னாள் கல்விப்பணிப்பாளரும், வலம்புரியின் முன்னாள் ஆசிரியருமாகிய உயர் சைவத்திரு கோ.சி.வேலாயுதம் Sir அவர்களின் பாசமிகு சகதர்மினி சரோஜனாதேவி அவர்கள் கொழும்பு-கல்கிசையில் (T.P.060-2172542) 15.12.2008 தேதியன்று சிவபதமெய்தியதை யொட்டி எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இ.மாசிலாமணி (J.P.), (உளவளத்துணை- ஆலோசகர், பிரதிச்செயலாளர்-வடமாகாண புற்றுநோய்-எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்; முன்னாள் நிர்வாக அதிகாரி (A/O), வலி கிழக்கு+வடமராட்சி-தெ/மே பிரதேச சபைகள்; +நிர்வாக உத்தியோகத்தர், மின்சாரம், சுகாதாரம், நீர்வேலை (G.T.Z.) பிரிவுகள் மாநகரசபை, யாழ்ப்பாணம்).

குடும்பத்தினர்:
சர்வானந்ததேவி, கலாநிதி ரஞ்சன்-கௌரிதேவி, அனுசூயா BSc. (Agri), காயித்திரி (Electronic Engineer-France), ரூபாயினி (HNDA),

இல.21 (68/2) பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
21-12.2008
T.P.:021-2227784

c1903

# இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 285 ஓட்டங்களால் முன்னிலையில்



காம்பீர்–யுவராஜ் சிங்கின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய நான்காம்நாள் ஆட்டநேரமுடிவில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை யிழந்து 134 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதன் மூலம் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவச முள்ள நிலையில் 285 ஓட்டங்கள் வித்தியா சத்தில் முன்னிலையிலுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 19ஆம் திகதி மொகாலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 453 ஓட்டங்களை எடுத்தது.

இதில் காம்பீர் 179 ஓட்டங்களையும் டிராவிட் 136 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் பிளின்டொப் ,ஸ்வான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பனீசர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 282 ஓட்டங்களை எடுத்திருந்தது.


இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் மேலதிகமாக 20 ஓட்டங்களுக்குள் மிகுதி 4 விக்கெட்டுக்களையுமிழந்து அதன் முதலாவது இன்னிங்ஸில் 302 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலை பெற்றது.

இதில் அணித்தலைவர் பீற்றர்சன் 144 ஓட்டங்களையும் பிளின்டொப் 62,குக் 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்ப்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் சகீர்கான் 3 விக்கெட்டுக்களையும் மிஷ்ரா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 151 ஓட்டங்களால் முன்னிலையிலிருந்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 30 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் முதலாவது விக்கெட்டுக்காக சேவாக் 17 ஓட்டங்களுடன் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து களமிறங்கிய டிராவிட் 19 பந்துகளை எதிர் கொண்டு ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டெண்டுல்கர் 5 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 44 ஓட்டங்களைமாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் ஒரு முனையில் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய காம்பீர் ஓட்டங்களை எடுத்து நம்பிக்கையளிக்க தொடர்ந்து களமிறங்கிய லக்ஸ்மன் நிதானமாகத்துடுப்பெடுத்தாடினார்.

இந்த ஜோடி 36 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது லக்ஸ்மன் 15 ஓட்டங்களை எடுத்து ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து காம்பீருடன் இணைந்த யுவராஜ் சிங் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்து அசத்தினார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணியில் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

இந்நிலையில் நேற்றைய நான்காம்நாள் ஆட்டநேரமுடிவில் இந்திய அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் காம்பீர் 44 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 40 பந்துகளில் (5 பவுண்டரி,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 39 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் அன்டர்சன்,பிரோட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இதன் மூலம் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 285 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ள நிலையில் ஐந்தாவதும் இறுதியுமானநாள் ஆட்டம் இன்றாகும்.

## இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமனிலையில் முடிபுறும் நிலையில்

### மூன்று வருடங்களின் பின் ஹெயில் சதம்


கிறிஸ் ஹெயிலின் அபார சதத்தின் மூலம் நியூஸிலாந்துடனான இரண்டாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியின் நான்காவதுநாள் ஆட்ட நேரமுடிபின் போது மேற்கிந்தியதீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 241 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

நேபியரில் நடைபெற்றுவரும் இரண்டாவது போட்டியின் 4ஆவது நாளான நேற்றைய தினத்தில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த மேற்கிந்தியதீவுகள் அணி நாள் முழுவதிலும் துடுப்பெடுத்தாடியது. இதன்படி 4 ஆவதுநாள் ஆட்ட நேரமுடிபின் போது மேற்கிந்தியதீவுகள் அணி 115 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களை பெற்றுள்ளது. இதன் போது அணித் தலைவர் கிறிஸ் ஹெயில் தனது 8 ஆவது சதத்தை பூர்த்திசெய்தார்.

251பந்துகளுக்கு முகம் கொடுத்த ஹெயில் 13பவுண்டரிகளும் 6சிக்ஸர்களும் அடங்கலாக ஆட்டமிழக்காது 146 ஓட்டங்களை பெற்றார். எனினும் அவர் கடந்த 2005ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 317 ஓட்டங்களை பெற்றதன் பின்னர் டெஸ்ட் அரங்கில் பெறும் முதல் சதம் இதுவாகும் இந்த போட்டிகளுக்கு இடையில் அவர் 47 இன்னிங்ஸ்களில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர மேற்கிந்திய தீவுகள் அணிக்காக நேற்றைய தினத்தில் பிரெண்டன் நாஷ் 60 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.ஏ ற்கனவே முதல் இன்னிங்ஸுக்காக மேற்கிந் திய அணி 307 ஓட்டங்களை பெற்றதோடு பதிலெடுத்தாடிய நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 371 ஓட்டங்களை குவித்தது.

இதற்கமைய மேற்கிந்தியதீவுகள் அணி



இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கள் கைவசம் இருக்கும் நிலையில் 214 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலாக முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிபடைந்த நிலையில் இந்த போட்டியில் வெற்றி பெறும் அணி தொடரைக் கைப்பற்றிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் தீர்க்கமான கடைசி நாளாகும்.

## கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ணம்; மன்செஸ்டர் யுனைட்டட் சம்பியன்

ஜப்பானில் நடைபெற்று வந்த கழகங்களுக்கு இடையிலான பிபா உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் இங்கிலாந்து கழகமான மன்செஸ்டர் யுனைட்டட் அணி சம்பியன்பட்டம் வென்றது.





யோகோஹாமாவில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம், தென் அமெரிக்க சம்பியன் கழகமான லிகாடி குவாடோ அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன் போது மன்செஸ்டர் அணியின் முன்னணி வீரரான வெயின் ரூனி போட்டியின் 73 ஆவது நிமிடத்தில் பெற்ற கோல் மூலமே சம்பியன்பட் டத்தை அணி வென்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து கழகம் ஒன்று சர்வதேச அள வில் முதல் முறையாக சம்பியனாக தெரிவானது இதுவே முதல் முறையாகும்.முன்ன தாக இந்த ஆண்டில் மன்செஸ்டர் யுனைட்டட் அணி பிரிமியர் லீக் மற்றும் ஐரோப்பிய கிண்ணங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# முழுப்படை நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக தீபன் நியமனம்

## கொழும்பு ஊடகம் தகவல்

படையினர் தற்போது மேற்கொண்டு வரும் அனைத்து படை நடவடிக்கைகளுக்கும் எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தும் எதிர்ச் சமரின் ஒட்டுமொத்த தளபதியாக கேணல் தீபன் செயற்படுவதாக கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது வன்னியில் படையினர் மேற்கொண்டு வரும் வன்னி நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்டுவரும் அனைத்து சமர்க்களங்களினதும் ஒருங்கிணைப்புத் தளபதியாக கேணல் தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வடபோர் முனையின் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய கேணல் தீபன் தற்போது வன்னிப் பெரும் போர்க் களத்தின் முழுப் படை நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு, நேரடியாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெறிப்படுத்தல்களையும், ஆலோசனைகளையும் பெறுவதுடன் போர் நடவடிக்கைகள் தொடர்பான நிலவரங்களை நேரடியாக அவருடன் பகிர்ந்து செயற்படுகின்றார்.

பெரும் மண் அணைகளை அமைத்து முன் நகரும் படையினரை வழி மறித்து தாக்கியழிக்கும் உத்திகளை உருவாக்கி, அவற்றில் மிகுந்த தேர்ச்சி பெற்றவராக அவர் விளங்குகின்றார் என்று, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# அதிபர் சேவைக்கு சட்டவிரோத ஆட்சேர்ப்பு

## உயர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவைக்கு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு காரணமாக அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள 39 ஆசிரியர்கள் இந்த மனுவை தாக்கல் செய்தனர். மனுவில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த உட்பட்ட குழுவினர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இலங்கை அதிபர் சேவையின் இரண்டாம் தரத்தின் இரண்டாம் வகுப்புக்கு பதவியுயர்வு வழங்கப்பட்ட போது 24 ஆசிரியர்களுக்கு சட்டவிரோதமாகவும் அரசியலமைப்புக்கு மாறாகவும் நியமனங்கள் வழங்கப்பட்டதாக மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஆசிரியர் சேவையில் 2-ம் தரத்துக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சையில் 50 வீத புள்ளிகளை பெறத் தவறிய சிலருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அம் மனுவில் குறிப்பிடப் பட்டிருந்தது.

மேலும் இந்தப் பரீட்சையில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மனுதாரருக்கு பதவியுயர்வினை வழங்குவதற்கான உத்தரவினை பிரதிவாதிகளுக்கு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (ச-3)

## நாடாளுமன்...

வேண்டுமென அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் காமினி ஜெயவிக்கிரம,நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தைப் பிரதமரிடம் கையளித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருநாணாயக்க ,ஜோன் அமரதுங்க ஆகியோர் பிரதமரை நேரில் சந்தித்து இந்தக் கடிதத்தை கையளித்துள்ளனர். (ச)

# தமிழீழ அங்கீகார மாநாட்டிற்குத் தடை எதிர்த்து திருமாவளவன் வழக்கு

(சென்னை)

சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெற உள்ள தமிழீழ அங்கீகார மாநாட்டிற்கு பொலிஸ் தடை விதித்துள்ளது. இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் போவதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளுக்கு இடையே மோதல்கள் முற்றி வருகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி சென்னையில் தமிழீழ அங்கீகார மாநாடு நடத்தப் போவதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிவித்துள்ளது.

ஆனால் மாநாடு நடைபெறும் இடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்தது என்பதால் அதற்கு தடை விதிப்பதாக பொலிஸார் திடீரென்று அறிவித்துள்ளனர். இது அக்கட்சியினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் மாநாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க நீதிமன்றத்தை அணுகப் போவதாகத் தெரிவித்தார்.

**உயர் நீதிமன்றத்தில் வழக்கு**

இந்த அனுமதி மறுப்பை எதிர்த்து விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் நேற்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். (ச-5)

## ஆசிரியர்...

ஆயிரத்து 728 ஆசிரியர்களை தெரிவு செய்யவுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பித்த பாடசாலை, விண்ணப்பதாரியின் பாடத்திற்கான வெற்றிடங்களின் அளவுகளைக் கருத்திற் கொண்டே வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச-5)

## கிளிநொச்சியை நோக்கி...

இரண்டு முனைகளிலும் நேற்றுக் காலை 5 மணிக்கு செறிவான ஆட்டிலறி, பல்குழல் வெடிகணை மற்றும் கனரக பீரங்கிகளின் கடும் சூட்டாதரவுடன் முன் நகர்வுத் தாக்குதலை படையினரின் 57,58ஆம் டிவிசன்களின் படையினர் மேற்கொண்டனர்.

இம் முன் நகர்வு தாக்குதல்களுக்கு எதிராக தீவிர முறியடிப்புத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தி வருகின்றனர்.

கிளிநொச்சிக்கு தெற்காக இரணைமடுப் பகுதி நோக்கி படையினர் மேற்கொண்ட முன் நகர்வு ஏற்கனவே முறியடிக்கப்பட்டு விட்டது. கிளிநொச்சிக்கு மேற்கில் உருத்திரபுரம் பகுதியூடாக படையினர் மேற்கொண்ட முன் நகர்வும் முறியடிக்கப்பட்டு விட்டது.

மேலும் மூன்று முனைகளில் படையினரின் நகர்வுகளை முறியடிக்கும் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம் முறியடிப்புத் தாக்குதல்களில் படையினர் தரப்பில் இதுவரை 100 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 250க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட படையினரின் உடலங்களும் படையப் பொருட்களும் களமுனையில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வன்னிப் பிரதேசத்தில் இரணைமடு மற்றும் பரந்தன் களமுனைகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் மோதல்கள் இடம்பெற்றதாகவும் இதன்போது விடுதலைப் புலிகளின் மண் அரணில் 2 கிலோமீற்றர் தூரம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

இந்த மோதல்களில் 56 விடுதலைப் புலிகளும் 10 படையினரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ள இராணுவ அணிகளுக்கு ஆதரவாக விமானப் படையினர் நேற்று வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்திருக்கின்றார். (ச-5)

## றோகித...

உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் நடைபெற்றது. ஆனால் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் அதிகாரபூர்வமாக ஊடகங்களுக்கு வெளியிடப்படவில்லை என்று இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## மழையால்...

அவற்றை புனரமைத்தல் போன்ற பணிகள் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் நிலையில் வன்னி உட்பட்ட தமிழர் பிரதேசங்களிலுள்ள நீர்ப்பாசனக் குளங்கள் எவ்வித புனரமைப்புமின்றி கைவிடப் பட்ட நிலையிலுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## வன்னியில் நேற்றுப்...

பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் விமானப்படையின் எப்-07 ரக விமானங்கள் தாக்குதலை நடத்தின.

கிளிநொச்சி பொதுமருத்துவமனை வளாகத்திலும் குண்டுச் சிதறல்கள் வீழ்ந்துள்ளன.

இதில் தேவராசா நவமலர், சிவநாதன் கஜன், கனகராசா சிவகாந்தன் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். ஏழு வீடுகள் மற்றும் முருகன் கோவில் ஆகியன சேதமடைந்துள்ளன.

முள்ளிவாய்க்காலிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புக்கள் மீதும் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின. இதில் இராமச்சந்திரன் என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மேற்கு முருகன் கோவில் சேதமடைந்துள்ளதுடன் இடம் பெயர்ந்த மக்களின், ஏழு இடைக்கால வீடுகள் எரிந்துள்ளன.

இதே மக்களின் கடற்றொழில் உபகரணங்களும் தாக்குதலில் அழிந்துள்ளன. படையினரின் எறிகணைத் தாக்குதலில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வற்றாப்பளையில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மணலாற்றில் இருந்து நேற்றுப் படையினர் வற்றாப்பளை, முள்ளியவளை மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் வற்றாப்பளையில் சின்னத்துரை இராசமலர் (வயது 50) என்பவர் படுகாயமடைந்துள்ளார் என வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## கிளிநொச்சியை இழந்தா...

சமூகங்களை உருவாக்குவோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என இலங்கை அரசாங்கம் விதித்திருக்கும் நிபந்தனையை நிராகரித்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இந்த நிபந்தனை யதார்த்தமற்றது. எமது மக்களைப் பாதுகாப்பதற்கே நாங்கள் ஆயுதங்களை எடுத்தோம். எனவே மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டாலே ஆயுதங்களை நாம் கீழே வைப்போம் என தெரிவித்தார்.

கிளிநொச்சியை விரைவில் கைப்பற்றி விடுவோம் எனக் கூறிக் கொண்டு இலங்கை அரசாங்கப் படைகள் கிளிநொச்சியை நோக்கி இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்திருக்கும் நிலையிலேயே விடுதலைப் புலிகள் இவ்வாறு கூறியுள்ளனர். (ச-5)

## பொதுமக்களை விடுவிக்...

சமயப் பெரியார்கள், அமைச்சர்கள், சிரேஷ்ட அரச மற்றும் தனியார் நிறுவன அதிகாரிகள் போன்றோர் அரசிற்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்தும், தற்போது வடக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கும் நோக்கிலும் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ள வைபமொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வசிக்கும் அப்பாவிப் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்திவருவதாகக் குற்றஞ்சாட்டியதோடு, 2009 புதிய வருடப் பிறப்புடன், புலிகள் அமைப்பினர் இந்தத் தமிழ் பொதுமக்களை அரசினாலும், அரச படைகளினாலும் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பான பிரதேசங்களுக்கு வர அனுமதிக்க வேண்டும் என்றும் இல்லாவிடில் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பாக உள்ளூரில் மீண்டும் தடை செய்யப்பட்டு அதனடிப்படையில் தக்க நடவடிக்கைகளை தனது அரசு மேற்கொள்ளும் என்றும் ஜனாதிபதி புலிகளை எச்சரித்திருக்கிறார்.

இலங்கை நாட்டு மக்களின் ஒரே எதிரி புலிப் பயங்கரவாதமே என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டு படையினரின் வீரதீரத்திற்கான ஆண்டாக அமைவதையும், புலிகளின் பயங்கரவாதம் என்பது சரித்திரத்தின் பக்கங்களிலிருந்தே அகற்றப்படுவதையும் தனது அரசு உறுதி செய்யும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை விடுதலைப் புலிகளை பலப்படுத்தும் எவ்வித யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் தான் உடன்படமாட்டேன் என்றும் ஜனாதிபதி உறுதி கூறியிருக்கிறார்.

பல தீய சக்திகள், பயங்கரவாதத்தினை இல்லாதொழிக்கும் அரசின் இந்த முயற்சியை முறியடிக்க சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அரசு அவற்றினை வெற்றி கொள்ளும் என்றும் பயங்கரவாதத்தினை முறியடித்து நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல நாட்டினை நேசிக்கும் அனைத்து அரசியல் சக்திகளையும் அரசுடன் ஒன்றிணையுமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கிறார். (ச-5)

MANOJ EXPRESS

யாழ்.-கொழும்பு விமான சேவை

தினசரி சேவை உண்டு

ஒருவழிப் பயணம் ரூபா. 10,000/=

ஆசனத்திற்கு முன் பதிவு செய்யவும்.

தொடர்பு: No. 6, RAM COM
NEW MARKET.
Tel:- 222 3916
Mobile:- 077 926 9066

(C-1872)

Microsoft Certified
Systems Engineer MCP - MCSE
★ 100% செய்முறைகளுடன் கூடிய நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ கணனித்துறையில் வேலை செய்வோருக்கு சர்வதேசதகுதி
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ ComTIA A+ (Hardware Technician-AUSTRALIA) கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.12.2008 12.00PM
Become an Engineer
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.